


# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org

மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2297 மீனம் நல்லோரை பங்குனித் திங்கள் 11ம் நாள் நிறைமதி (24-03-2024 ஞாயிறு) வெளியீடு +94 21 222 9722

## காரைக்கால் அம்மையார் குருபூசை



பங்குனித் திங்கள் 15ம் நாள் (28-03-2024) வியாழக்கிழமை சுவாதி நாண்மீனும் கூடிய நன்னாளில் அன்று காரைக்கால் அம்மையார் குரு பூசை இடம்பெறும்.

# ஆடு தலையாக வரும் இளவேனில் சித்திரையே தமிழர் புத்தாண்டு

# இம்முறை பகைக்கேடு ஆண்டு, 13 இரவு 8.15 மணிக்குப் பிறக்கிறது




இளவேனில் சித்திரையே தமிழர் புத்தாண்டு ஆகும். இம்முறை பகைக்கேடு (குரோதி) ஆண்டு பங்குனி 31ம் நாள் அதாவது 13ம் திகதி (13-04-2024) சனிக்கிழமை இலங்கை இந்திய நேரப்படி மாலை 8.15 மணிக்குப் பிறக்கிறது. இது சித்திரைத் திங்கள் வளர்பிறை அறுமைப் பிறைநாளும் (சட்டி), மிருகசீரிட மூன்றாம் பாத நன்னாளாகும். அன்று பிற்பகல் 4.15 மணியிலிருந்து இரவு 12.15 (14-04-2024) மணிவரை புண்ணியகாலமாகும்.



தமிழர்களின் பருவ காலங்களில் இளவேனில் காலம் “வசந்த காலம்” சூரியன் தனது சுற்றுப் பாதையில் சரியாக கிழக்கு திசையிலிருந்து தன் பயணத்தை தொடங்கும் காலமாகும். கதிரவனின் ஆரம்ப நாழிகை முதல் நாளே, தமிழ்ப் புத்தாண்டாக கொண்டாடப்படுகிறது. சித்திரைத் திங்களே பழந்தமிழரின் புத்தாண்டு என்பதை நெடுநல்வாடை சிறப்பாக எடுத்துரைக்கிறது. **“திண்ணிலை மருப்பின் ஆடு தலையாக விண்ணூர்பு திரிதரும் வீங்கு செலல் மண்டிலம்”** என விளக்கியுள்ளார் நக்கீரர் அவர்கள். இங்கு ஆடு தலையாக என்பது, மேழம் தான் ஓரையில் முதலாவது மற்றும் தலையானது. அதுவே ஆண்டின் பிறப்பாகும் என்பதாகும்.

தை தான் தமிழர் புத்தாண்டு என்பது, தமிழர்கள் புறக்கால வானியல் கணித அறிவியல், தமிழ் ஐந்திர (பஞ்சாங்க) அறிவியல் கணிப்பில் உரு 6 வான ஆண்டுப்பிறப்பல்ல.

(06ஆம் பக்கம் பார்க்க)

## சிட்னி முருகன் திருக்கோயில் பெருந்திருவிழா முதன்முறையாக ஓதுவார் பங்கேற்பு



இருபத்தைந்து வருடங்களைக் கடந்த சிட்னி முருகன் திருக்கோயில் பெருந்திருவிழாவிற்காக இந்த ஆண்டு, நிர்வாகக் குழுவினர் முதன் முறையாக தமிழ்நாட்டில் இருந்து ஓதுவார் ஒருவரை வரவழைத்திருக்கின்றனர். திருக்கோயிலின் அழைப்பில் திருமுறைப் பேரறிஞர், திருமுறைக் கலாநிதி சிதம்பரம் ஆலவாய் அண்ணல் அறக்கட்டளை தேவாரப் பாடசாலை ஆசிரியர் மதுரை சிவ பொன். மு. முத்துக்குமரன் அவர்கள் சிட்னி வருகைதந்திருக்கிறார்கள்.

கடந்த 16ம் திகதி ஆரம்பமாகிய பெருந்திருவிழாவின், நான்காம் நாள் திருவிழாவாகிய **“திருமுறைத் திருவிழாவில்”** திருஞானசம்பந்தர் சுவாமிகள் அருளிளிச் செய்த திருக்கழுமலப் பதிகத்தினை நட்டபாடை பண்ணில், கம்பீரநாட்டை இராகத்தில், கண்டநடையில் ஓதுவார் அவர்கள் பாட, அதனை உள்வாங்கி இலங்கை நாதசுவரவித்துவான் திரு.குமரன் குழுவினர் **“மல்லாரி”** இசையில் சுவாமி புறப்பாட்டுடன் இசைத்தனர். அடியார்கள் இதனை மிகவும் ஆர்வமாக பார்த்து இன்புற்றனர்.

**பிறையணி படர்சடை முடியிடை பெருகிய புனலுடை யவனிறை**
**இறையணி வளையிணை முலையவள் இணைவன தெழிலுடை யிடவகை**
**கறையணி பொழினிறை வயலணி கழுமல மமர்கன லுருவினன்**
**நறையணி மலர்நறு விரைபுல்கு நலமலி கழல்தொழன் மருவுமே**

தொடர்ந்து நடைபெற்ற வெளி வீதியுலாவில் அம்மை அப்பருடன் அழகன் முருகன் வர, முன்னே திருமுறைகள் நால்வர் பெருமக்களுடன் செல்ல, திருமுறைகள் பின்னே பாடப்பட்டு வந்த காட்சி, அடியார்களை மெய்யுருக வைத்தது. சிட்னி முருகன் திருக்கோயில் நடப்பாண்டு நிர்வாகத்தினருக்கு அடியவர்கள் பலர் பாராட்டுகளைத் தெரிவித்தனர். பெருந்திருவிழாக்களுக்கு ஓதுவார்களை வரவழைப்பது மிகவும் தேவையானதொன்றாகும். இதனை மற்றத் திருக்கோயில்களும் செய்ய முன்வரவேண்டும் என்ற விண்ணப்பத்தினை முன்வைக்கிறோம்.

திருச்சிற்றம்பலம்

# தென்னாடு பெருஞ் சிவனிரவு ஐம்பூதநாதர் அருட்கோலம்



முதலாம் சாமம்



இரண்டாம் சாமம்




மூன்றாம் சாமம்



நான்காம் சாமம்

## கனடா அல்பேட்டா மாநிலத்தின் பிரதி பிரதம நீதியரசர் யாழ் வருகை



ஹாவாய் சைவ ஆதீனத்தின் அடியவரும், கனடா அல்பேட்டா மாநிலத்தின் பிரதி பிரதம நீதியரசருமாகிய மதிப்பிற்குரிய அரண் வேலன் அவர்கள் தனது துணைவியாருடன் யாழ் மண்ணில் திருத்தல வழிபாட்டை மேற்கொள்ள வந்துள்ளார். கனேடியராகிய இவர், தனது 19 வது வயதில் குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளின் சைவ சமய போதனைகளால் ஈர்க்கப்பட்டு, சைவ சமயத்தை தழுவிக் கொண்டவர். 1990 ம் ஆண்டுகளில் குருதேவரின் பணிப்பின் பேரில் கனடா, எட்மன்ரன் நகரில் மகா கணபதி கோயிலை அமைப்பதற்கு முன்னின்று உழைத்தவர்.

தற்போது கனடா அல்பேட்டா மாநிலத்தின் பிரதி பிரதம நீதியரசராகப் பணியாற்றும் மதிப்பிற்குரிய அரண் வேலன் அவர்கள் தனது பதவியேற்பின் போது சைவ உபநிடதங்களை முன்னிலைப்படுத்தி உறுதிமொழி செய்து கொண்டு பதவி ஏற்றுக் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

திருச்சிற்றம்பலம்

## வாழைச்சேனையில் அறநெறிகல்வி விழிப்புணர்வு ஊர்வலமும் திருவள்ளுவர் குருபூசை வழிபாடுகளும்



இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஆலோசனை, வழிகாட்டலுக்கமைவாக கோறளைப்பற்று பிரதேசஇந்து அறநெறிப்பாடசாலைகள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் வாழைச்சேனை அருள்மிகு கைலாயபிள்ளையார் அறநெறிப்பாடசாலையும், கைலாய பிள்ளையார் திருக்கோயிலும் இணைந்து நடாத்திய திருவள்ளுவர் குருபூசையும், அறநெறிக்கல்வி விழிப்புணர்வு ஆன்மீக எழுச்சி ஊர்வலமும் கடந்த 25-02-2024 ஞாயிற்றுக் கிழமை அன்று காலை 8.30 மணிக்கு மட்ஃ ககுஃ வாழைச்சேனை இந்துக் கல்லூரி ஒன்றுகூடல் மண்டபத்தில் அறநெறிப்பாடசாலையின் அதிபர் செல்வி. ரமணன் வர்ஷிக்கா அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

வாழைச்சேனை அருள்மிகு கைலாய பிள்ளையார் கோயிலில் இருந்து ஆரம்பமான திருவள்ளுவரின் திருவுருவப் படம் தாங்கிய ஆன்மீக எழுச்சி ஊர்வலம், வாழைச்சேனை கிராமத்தை வலம்வந்து அதன்பின் பாடசாலை ஒன்றுகூடல் மண்டபத்தில் விசேட பூசையும், மாணவர்களின் கலை நிகழ்வுகளும், திருவள்ளுவரை பற்றிய சிறப்பு சொற்பொழிவுகளும் இடம்பெற்றன. இதனை தொடர்ந்து ஊர்வல நிகழ்விலும், கலை நிகழ்வுகளிலும் பங்குபற்றிய மாணவர்கள், ஆசிரியர்கள் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் கோறளைப்பற்று பிரதேச இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. நே. பிருந்தாபன், பேத்தாழை - வாழைச்சேனை வீரையடி விநாயகர் அறநெறிப்பாடசாலை அதிபர் திரு. ச. கார்த்தீபன், கண்ணகிபுரம் முத்தமிழருவி அறநெறிப்பாடசாலை அதிபர் திரு. ச. பிரதீபன், பேத்தாழை ஸ்ரீ கிருஷ்ணா அறநெறிப்பாடசாலை அதிபர் திரு. க. தனுஷன், கருங்காலிச் சோலை ஸ்ரீகிருஷ்ணா அறநெறிப்பாடசாலை அதிபர் திருமதி. கிருஷாந்தினி, கைலாயபிள்ளையார் திருக்கோயில் நிர்வாகத்தினர், அறநெறிப்பாடசாலைகளை சேர்ந்த மாணவர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

திருச்சிற்றம்பலம்

## யாழ். பல்கலை சைவசித்தாந்த முதுமாணி பட்டமளிப்பு






யாழ் பல்கலைக்கழக உயர்பட்டப்படிப்புக்கள் பீடத்தில் இம்முறை சைவசித்தாந்தத்தில் முதுமாணி பட்டத்தை பெற்றுக்கொண்ட 28 மாணவர்களுக்கும் தென்னாடு தன் வாழ்த்துக்களை உரித்தாக்கி மகிழ்கின்றது. ( இப்படத்தில் குறிப்பிட்டளவானோரே உள்ளனர். ஏனையவர்களையும் வாழ்த்தி மகிழ்கின்றோம்) இந்த மண்ணில் சைவசித்தாந்த செழுமையும் ஞானமார்க்கமும் நிலைபெற ஐம்பூதநாதர் திருவருள் துணை நிற்கட்டும்.

தென்னாடு
செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org

சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன்
தலைமை ஆசிரியர் – தென்னாடு,
+6149949 3300, thennavan@thennadu.org



# தமிழர் தொடராண்டு மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2297

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு - (குறள் - 423)**

தமிழர்களுக்கு ஒரு தொடராண்டு இல்லையா என்ற கேள்வி என்னை வலுவாக உலுப்பி வந்தது. பண்டைத்தமிழர் பண்பாடு, அதன் நீட்சி என்று வரலாறு பேசும் நாங்கள் , கிறித்தவ ஆண்டு, வள்ளுவர் ஆண்டு, தொல்காப்பிய ஆண்டு என்று ஒரு தொடரண்டினைப் பயன்படுத்துகிறோம். அப்படியாயின் மயங்கா மரபுத்தமிழர்களின் அறிவியல் நீட்சி இவ்வளவு தான என்ற கேள்வி மனதில் எழும்.

தொடராண்டுகளை ஒரு மனிதனைச் சார்ந்து அல்லது ஒரு இலக்கியம் சார்ந்து கணிப்பது உண்மையில் அறிவின் ஆழத்தினை காட்டாத செயலாகும். தொடராண்டு என்பதனை அறிவியலின் துணைகொண்டு ஊழியின் அடிப்படையில் கணக்கிடவேண்டும்.

ஊழி என்பதை இயற்கை நிலைப்பெயராமை அல்லது தடம்பெயராமை என்றும், இயற்கை பெருந்தோன்றல்களாகவும் தமிழர்கள் கண்டனர். ஊழி என்றால் முந்தைய இயற்கை விதிகள் அழிந்து புதிய இயற்கை பிறத்தல் என்றும் பொருள் கொள்ளலாம். இயற்கை தூரகால அறிவியலை ஊழி என்று தமிழர்கள் அழைத்தார்கள்.

**நாழிகை ஊழியில் நீண்டு உலாவும் -பெரிய திரு-9: 5:3**

திங்கள், ஞாயிறு அல்லது மற்றைய கோள்கள் இணைந்து நாள்மீன்கள் அல்லது உடு மற்றை எல்லா வானியல் தனிமங்களும் ஒன்றிணைந்து கால மண்டிலமாகப் பெரும் கூட்டமாக இயங்குவதை அல்லது சுழற்மண்டில ஓர் அகன்ற தூர காலமாக உருவாகுவதை ஊழி என்று தமிழர்கள் அழைத்தனர். சூரிய, சந்திர, பெரும் கோள்களாகிய வியாழன், காரி (சனி), உடுக்களின் 360 பாகை சுற்றை ஒரு நேர் கோட்டில் நற்றோன்றல் (பிரபவம்) சுழியத்தில் (0) நிறுத்தி உடுமான (நாள்மீன்) (Sidereal year prediction ) துரகால ஊழி, சூரிய மான (Solar year prediction), சந்திர மான (Lunar Prediction), வியாழமான (Jupiter or Jovian year prediction), காரி(சனி) மான (Saturn year prediction) கணியங்கள் ஒருமித்து அனைந்து ஒன்றிய ஒரு கணியமாக உருவாகுவது ஊழியாகும்.

பண்டையத் தமிழர்கள் ஐந்திர பஞ்சாங்கத்தில் கணித்த உடுமான (நாள்மீன்) (Sidereal year prediction) நிரயன பெயரா ஆடு ஆயப்புள்ளியே (Fiducial goat origin point) மேழ ஊழி தொடராண்டு காலமாகும். மேழ தொடராண்டு ஊழி என்ற ஒன்று தமிழர்களுக்கு உண்டு. தமிழ் கால ஐந்திர பஞ்சாங்க கணிதத்தில் மேழத் (சித்திரை) திங்களை முதல் ஆண்டாகக் கொண்ட காலவூழி கி.மு 274 (மேழ விழுகம்பம் – Aries vernal equinox) ஆகக் கணிக்கப்பட்டுள்ளதை மெட்ராசு பிரசிடென்சி சொற்களஞ்சியம் (Maclean, 1893) மேற்கோள் காட்டுகின்றது.

இதன் அடிப்படையில் நாங்கள் இவ்வளவு காலம் பயன்படுத்தி வந்த வள்ளுவர் ஆண்டு 2055 (தவறுதலாக 2053 என்று அச்சிடப்பட்டுள்ளது) என்ற தொடராண்டினை, இந்த இதழுடன் நிறுத்தி, இன்றிலிருந்து மேழ விழுகம்பம் தொடராண்டு 2297 என்ற கொள்கையின் அடிப்படையில் இயங்குவோம் மற்றும் பயன்படுத்துவோம்.

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.**

# இணுவிலில் தமிழ் வழிபாட்டு பயிற்சிக் கூடம் திறப்பு



தமிழைத் தெய்வத்தமிழ் என்று அருளாளர்கள் அழைப்பர். வேறு எந்த மொழியும் இப்படித் தெய்வத்தோடு இணைத்துப் பேசப்படும் சிறப்பைப் பெறவில்லை. எம் இறைவனை எம் மொழியில் வழிபடுவதே உகந்தது. இதுவே தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் நோக்கமாகவும் அமைகிறது. அந்த வகையில் சைவநெறிக்கூடமும் திருக்கோயில்களில் கருவறையில் தெய்வத்தின் முன் தெய்வத் தமிழை மீள்மீட்கும் பெரும் பணியில் தொடர்ந்து தமிழை தன் இன்செவியில் விரும்பிக் கேட்கும் ஞானாம்பிகை உடனுறை ஞானலிங்கேச்சுரர் அருளால் மேற்கொண்டு வருகின்றது.

இவ்வழியில் கடந்த 20-03-2024 புதன்கிழமை அன்று, சைவநெறிக் கூடத்தினரால் தமிழ்வழிபாட்டுப் பயிற்சிக்கூடத்தினை இலங்கை, யாழ். இணுவில் ஞானலிங்கேச்சுரர் திருக்கோயிலில் திறந்துவைக்க குருவருளும் திருவருளும் நிறைந்துகூடியுள்ளது. இச்செயற்பாடானது ஈழத்தில் தெய்வத்தமிழ் வழிபாட்டின் சிறப்பானது அனைவரையும் சென்றடைய முக்கிய பங்காக அமைகிறது.

**திருச்சிற்றம்பலம்**

# சிட்னியில் திருமுறை பயிற்சிப் பட்டறை



கெலன்சுபேர்க் இந்து ஆலய அனுசரணையுடன் யாழ்ப்பாணம் இந்து கல்லூரி பழைய மாணவர்கள் சங்கம் நியூ சவுத் வேல்சு நடாத்தும் திருமுறை பயிற்சிப் பட்டறையானது கடந்த மார்ச் 12,13 மாலை 6.30 மணிமுதல் 8.30 மணிவரை என இரு நாட்களாக துங்காவி சனசமூக நிலையத்தில் இடம்பெற்றது.

சைவத்தினையும் தமிழினையும் தாய் மண்ணில் வளர்க்க உருவாக்கப்பட்ட யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சிட்னி பழைய மாணவர் சங்கத்தினர், புலம்பெயர் மண்ணிலும் அதன் நோக்கங்களை வியாபிக்கும் நோக்குடன், இந்த இரண்டு நாள் திருமுறைப் பயிற்சிப் பட்டறை ஒழுங்கு செய்திருந்தனர்.

இந்த பட்டறையில் திருமறைக்காடு சிவத்திரு சிவகுமார் சொக்கநாதன் ஓதுவார் அவர்கள் திருமுறை பண்ணிசை குறித்த விளக்கங்கள் வழங்கியிருந்தார். வாழ்வியல் வழிகாட்டும் தெரிந்தெடுத்த திருமுறைகளே இங்கு முன்னிலைப் படுத்தப்பட்டிருந்தன.

இளம் சமூகத்தினர் முதல் பெரியோர்களும் பங்குபற்றி அருளினை பெற்றிடும் வகையில் இலவச அனுமதியுடன் இந்நிகழ்வானது முன்னெடுக்கப்பட்டிருந்தது.

**திருச்சிற்றம்பலம்**

# பெருஞ்சிவனிரவை முன்னிட்டு சைவ மாணவர் சபையினரால் வடக்கிலுள்ள பாடசாலை திருக்கோயில்களுக்கு பூசைப் பொருட்கள் வழங்கல் (07-03-2024)



கிளிநொச்சி இந்துக் கல்லூரி



கிளிநொச்சி மகா வித்தியாலயம்



கோணாவில் மகா வித்தியாலயம்



முழங்காவில் மகா வித்தியாலயம்



பளை மத்திய கல்லூரி



பளை இந்து ஆரம்பப் பாடசாலை



விசுவமடு மகா வித்தியாலயம்



பிரமந்தனாறு மகா வித்தியாலயம்



பூநகரி மத்திய கல்லூரி



பரந்தன் இந்து மகா வித்தியாலயம்

தென்னாடு
செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org

சிவத்திரு. தென்னாடு நிலவன்
அடுத்த தலைமுறை ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (77) 671 6678 | nilavan@thennadu.org



# தென்னாடு நிறைமதி அறிக்கை

(23-02-2024) – தென்னாடு திங்கள் இதழின் நாற்பத்து இரண்டாவது இதழ் வெளியீடு, மாசித் திங்கள் 11ம் நாள் வெள்ளிக்கிழமை அன்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு. வேலன் சுவாமிகள் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் சிறி சற்குணராசா ஐயா அவர்களும் கலந்து சிறப்பித் திருந்தனர்.

(01-03-2024) – செல்லத்துரை சிவபாதசுந்தரம் அவர்களின் ஆண்டுத் திதி வழிபாடுகள் இடம்பெற்றது.

(07-03-2024) – பெருஞ்சிவனிரவை முன்னிட்டு சைவ மாணவர் சபையினரால் வடக்கிலுள்ள பாடசாலை திருக் கோயில்களுக்கு பூசைப் பொருட்கள் வழங்கல் இடம்பெற்றது.

(08-03-2024) – பெருஞ்சிவனிரவு வழிபாடுகள் நான்கு சாமமும் நால்வகை திருமஞ்சனத்துடன் சிறப்பாக தென்னாட்டில் இடம்பெற்றது. அதிகாலை அடியார்களுக்கு அமுதும் வழங்கப்பட்டது. மேலும் யாழ் இந்து ஆரம்ப பாடசாலை, கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை, கொக்குவில் இந்துக் கல்லூரி ஆகியவற்றில் அமையப்பெற்ற திருக்கோயில்களில் பெருஞ்சிவனிரவு வழிபாடுகள் தென்னாட்டு அர்ச்சகர்களினால், தென்னாடு சைவ மாணவர் சபையின் நிதி அனுசரணை உடன் சிறப்பாக இடம்பெற்றது. மேலும் மாணவர் கலைநிகழ்வுகளும் சிறப்பாக இடம்பெற்றி ருந்தன.

(16-03-2024) – தயாகரன் தர்மி அவர்களினுடைய திருமணம் தெய்வத் தமிழில் ஆற்றி வைக்கப்பட்டது. இத்திருமணத்தை ஒளியகம் ஒளியரசு ஐயா அவர்கள் ஆற்றி வைத்தார்.

(16-03-2024) – ICBT தனியார் பல்கலைக்கழத்தில் கல்வி மற்றும் தொழில் விருத்தி வேண்டி சாந்தி வேள்வி இடம்பெற்றது. இவ்வேள்வியை ஒளியகம் ஒளியரசு ஐயா அவர்கள் ஆற்றி வைத்தார்.

(17-03-2024) – ஒளியகம் ஒளியரசு ஐயா அவர்களினால் நுழைவு தீக்கை (சமய தீக்கை) வழங்கி வைக்கப்பட்டது. இந்நாளில் மூன்று மாணவர்கள் தீக்கை பெற்றனர்.

(17-03-2024) – கனகரத்தினம் தையல்நாயகி அவர்களின் ஆண்டுத் திதி வழிபாடுகள் இடம்பெற்றது.

(21-03-2024) – யோகர் சுவாமிகளின் குருபூசை வழிபாடுகள் இடம்பெற்றது.

(22-03-2024) – பங்குனித் திங்கள் வளர்பிறை கழுவாய் வழிபாடுகள் இடம்பெற்றது.

திருச்சிற்றம்பலம்

# தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல் – கேட்போம் தெளிவோம்

**அதுசரி, சைவநூல்கள் இறைவனை நிர்க்குணன் என்றும் குறிக்கின்றது. எண்குணன் என்றும் குறிக்கின்றது. குழப்பமாக இருக்கே? ஆதிசங்கரர் தோற்றுவித்த சுமார்த்தமதம் நிர்க்குணப் பிரம்மம் என்று கூறுகின்றதே? அந்த நிர்க்குணப்பிரம்மமும் சைவசமயத்தின் சொரூப இயல்பும் ஒன்றா? ஆபிரகாமிய மதங்களில் தெய்வங்களுக்குக் கூறப்பட்டுள்ள குணங்கள் சைவசமயத்தோடு ஒப்பிடக்கூடியவையா?**



சிவஞானச் செல்வர்.
மருத்துவர்
ஈசான பிரதாபன்
தேசிகர்

**நிர்க்குணனாய் நின்மலனாய் நித்தியானந்தனாய் - சிவஞானபோதம்**

மும்மலப் பிணைப்பால் உயிர்களுக்கு அமையும் இராசதம்,தாமசம், சாத்துவீகம் என்னும் முக்குணங்கள் கடவுளுக்கு இல்லையென்று கூறுவதன் பொருட்டு சிவபெருமானை நிர்க்குணன் என்று கூறும் மரபு சைவசமயத்தில் உண்டு. ஆனால், கடவுளுக்கு எந்தவொரு குணமும் இல்லையென்று சைவசமயம் ஒருபோதும் கூறுவதில்லை. ஏனெனில், கடவுளுக்கு எந்தவொரு குணமும் இல்லையென்றால், அந்தக் கடவுள் ஒரு கல்லுக்கு சமனாவார். சடப்பொருளாகிவிடுவார்.

ஆதிசங்கரர் உருவாக்கிய ஏகன்மவாதம் எனப்படும் ஸ்மார்த்தமதத்தில் (மாயாவாதமதத்தில்) கடவுளை நிர்க்குணப்பிரமம் என்பர். அதாவது எந்தவொரு குணங்களும் அற்றவர் என்பர். குணங்கள் அற்ற பிரம்மம், குணங்களுடைய உயிர்களாயும் தெய்வங்களாயும் உலகமாயும் மாயையினால் பல்வகைப்பொருள்களாகத் தோன்றுகின்றன என்று கூறும். அதாவது நிர்க்குணப்பிரம்மம் சகுணப்பிரம்மமாகிவிடுகின்றது. இல்லது உள்ளதாகாது என்பது சற்காரியவாதம். குணமேயில்லாத பிரம்மம் இராஜச,தாமச,சாத்வீக குணமுள்ள உயிர்களானது அறிவுக்கு பொருத்தமில்லாத ஒன்றாகும். மேலும், பிரம்மம் சொரூபநிலையில் எந்தக்குணங்களும் இல்லாதிருக்கின்றதென்றால், அந்தப் பிரம்மம் ஒரு சடமேயாகும். அந்தச் சடம் மாயையால் உயிர்களாகவும் உலகாகவும் திரிபடைந்துள்ளதென்றால், உயிர்களும் உலகைப்போன்று சடப்பொருள்களேயாகும். இவ்வாறான அறிவுக்கு ஒவ்வாத கருத்துகளைச் சைவசமயம் முழுமையாய் நிராகரிக்கின்றது. சிவபெருமான், சொரூபநிலையில் மங்கலக்குணங்களாகிய எண்குணங்கள் உடையவரென்று போற்றப்படுகின்றார். சைவசமயம் சொரூப நிலை மட்டுமன்று, எந்தவொரு நிலையிலும் சிவபெருமானுக்கு மனிதர் முதலிய உயிர்களுக்கு விளங்கும் இராஜச,தாமச, சாத்வீக குணங்களைக் கற்பிப்பதில்லை. ஏனெனில் சிவபெருமானுக்கு ஆணவச்சார்பு ஒருபோதும் ஏற்படுவதில்லை.

ஆபிரகாமிய மதங்கள் தம்மதத் தெய்வத்தை அளவற்ற அன்புடையவன் என்று கூறும் அதேசமயம், **"பழி வாங்குபவன்"** என்றும் கூறுகின்றன. தன்னை வழிபடாதவர்களை எக்காலத்திலும் மீளமுடியாத நரகத்தில் தள்ளுபவனாகக் கூறுகின்றன. அளவற்ற அன்பும் சரி, பழிவாங்கும் தன்மையும் சரி, சாத்வீக,தாமச,இராஜச குணங்களின் வெளிப்பாடேயாகும். சைவசமயம் **"அன்பே சிவம்"** என்பது அன்பு மார்க்கத்தினால் சிவபெருமானை வழிபடல் வேண்டும் என்னும் பொருட்டேயொழிய,சிவபெருமானைக் குறிப்பிடும்போது அருள் உடையவர் என்றே குறிப்பிடும். அதாவது, மனிதரின் இரக்க குணமே அன்பு. சிவபெருமானின் இரக்க குணம் அருள் எனப்படும். அன்பு என்பதை அருளுக்கு உபச்சாரமாகவும் பயன்படுத்தும் வழக்கு உண்டு. கடவுள் அன்பே வடிவானவர், கடவுள் அன்புடையவர் முதலிய கூற்றுக்கள் அருளுக்கு அன்பை உபச்சாரமாகப் பயன்படுத்தும் வழக்கில் எழுந்தவையாகும். ஆனால், தத்துவரீதியில் அருளுக்கும் அன்புக்கும் உரிய வேறுபாடு சைவசமயத்தில் தெளிவாக உரைக்கப்பட்டுள்ளது. இவ்வகை வேறுபாடுகள் ஆபிரகாமியமதங்களில் இல்லை. தன்னை வணங்காதவர்களை மீளா நரகத்தில் வீழ்த்தும் "பழி வாங்கும்" தெய்வமாகவே அம்மதத் தெய்வங்கள் கூறப்பட்டிருப்பது, ஆணவ வயப்பட்ட மானிடக்குணத்தையே குறித்து நிற்கின்றது. எனவே, ஆபிரகாமிய மதங்களில் கூறப்படும் தெய்வங்கள் முக்குண வசப்பட்ட உயிர்கள் என்றுதான் சைவசமயத்தின்படி பொருள்கொள்ளவேண்டும். இது கடவுள் கொள்கைக்கு முரணாவதோடு, அறிவுக்கும் பொருத்தமற்றதாகும்.

**சிவபெருமானின் சொரூப இயல்பு என்பதால் பெறப்படும் உண்மைகள் யாவை?**

- கடவுள் உருவம் அற்றவர்.
- கடவுள் அருவம் அற்றவர்.
- கடவுள் அருவுருவம் அற்றவர்.
- கடவுள் ஆண்,பெண்,அலியென்னும் தன்மைகள் அற்றவர்.
- கடவுள் தன்பொருட்டாக எந்தத்தொழிலையும் செய்யவேண்டியதில்லை.
- சிந்தனைக்கு அப்பாற்பட்டவர்.
- கடவுளின் அருளாலேயே அவரை உணரமுடியும்.
- அவருக்கு விருப்பு வெறுப்பு எதுவும் இல்லை.
- ஆணவம்,கன்மம்,மாயை என்னும் மும்மலப்பிணைப்பினால் உருவாகும் இராசதம்,தாமசம்,சாத்வீகம் என்னும் உயிர்களின் குணங்கள் கடவுளுக்கு இருப்பதில்லை.
- பூ வைத்தால் மகிழ்வும், பூ வைக்காவிட்டால் கோபம்கொள்ளும் தன்மையும் கடவுளுக்கு இல்லை.
- தன்னை வழிபட்டால் மகிழ்வும் நிந்தித்தால் ஆத்திரமும் கடவுளுக்கு ஏற்படுவதில்லை.
- எண்குணங்கள் உடையவர்.

இவ்வாறான கடவுளின் சொரூப இலக்கணத்தன்மையினை பரசிவம் என்றும், சுத்தசிவம் என்றும் வழங்கப்படும். சிவம் என்னும் பொதுச்சொல்லாலும் கூறப்படும்.



தென்னாடு
செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org

சிவத்திரு. சிவ. செந்தமிழாதன்,
ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
0715588737, aathan@thennadu.org



# என்ன செய்யப் போகின்றோம்?

காலம் தோறும் இலங்கைத்திருநாடு பல்வேறுபட்ட அமைதியின்மைக்கு உள்ளாகியது யாவரும் அறிந்ததே. அது இனப்பிரச்சினையாக உருவாகி ஆயுதப்போராட்டமாக வளர்ந்து பின் அது அற்றுப்போன பின் இன்று ஆங்காங்கே மதப்பிரச்சினையாக உருவெடுப்பதைக்காண்கின்றோம். சமயங்கள் இறைவனையும் ஆன்மாவையும் இணைக்கும் பாலமாக மட்டுமன்றி இனங்களை இணைக்கும் பாலமாகவும் அமைதல் வேண்டும். பௌத்தர்களும் சைவர்களும் செறிந்து வாழும் இந்த நாட்டில் சமய சுதந்திரம் என்பது இன்று எந்த அளவில் இருக்கின்றது என்பது ஆராயத்தக்கதாகும்.

கடந்த பெருஞ்சிவனிரவு (சிவராத்திரி) தினத்தன்று வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேச்சரர் ஆலயத்தில் வழிபாடு மறுக்கப்பட்டதும் அதைத்தொடர்ந்து ஏற்பட்ட அமைதியின்மையும் நாம் எல்லோரும் அறிந்த விடயமேயாகும்.

ஆதிகாலம் தொட்டே இருந்து வரும் சமய கலாசார அடையாளங்களை இல்லாது செய்வதும் பூசை நடைமுறைகளைத் தடுப்பதும் மனிதம் சார்ந்த செயல் இல்லை என்பதைச் சார்ந்தோர் புரிந்து கொள்ளும் காலம் வரும். எனினும் இந்த இடர்பாடான சூழலில் இந்த மண்ணில் வாழும் சைவத்தமிழர்களாகிய நாம் என்ன செய்யப்போகின்றோம்? சைவ சமயத்தலைவர்கள் என்ன செய்யப்போகின்றார்கள்? மதகுருமார் எதை செய்ய இருக்கின்றார்கள்? ஒருமித்த குரலில் ஒரே கோரிக்கையை முன் வைக்க போகின்றோமா?அல்லது ஒருவரை ஒருவர் குற்றம் சுமத்தி, தேவையானதைத் தவிர்த்து தேவையற்ற சலசலப்புக்களால் முதன்மை சிக்கலை வழுவழுக்கச் செய்யப்போகின்றோமா? செய்துகொண்டிருக்கின்றோமா? இப்போது எழுந்த இந்த முரண்பாடு தீர்வு எட்டப்படாமலேயே இன்னுமோர் குழப்பத்தால் மறக்கடிக்கப்படும். பெரிய கோட்டை அழிக்காது சிறிய கோடாக்குவதற்கு, அதனருகில் அதை விட ஒரு பெரிய கோட்டை கீறுவதைப்போல் இங்கு தொடர்ச்சியாக சிக்கல்கள் உருவாக்கப்படும் என்பது அறிந்ததே!

எனவே விழிப்போடு நாம் எதிர்காலத்தில் எமது ஆலயங்களைப் பாதுகாப்பதற்கும் வழிபாட்டு நடைமுறைகளை அடுத்த தலைமுறைக்கு கடத்துவதற்கும் சமயப் பற்றுள்ள சீர்வளர் சீர் ஆறுமுகநாவலரைப் போன்ற இளையவர்களை உருவாக்க ஏதேனும் முயற்சிகளில் ஈடுபடுகின்றோமா? எனில் இல்லை என்பதே உண்மையாகும்.

கருத்தாளமும் சமயச்செறிவும் கொண்ட பேச்சாளர்களும் எழுத்தாளர்களும் இன்று இளையவர்கள் மத்தியில் எத்தனை பேர் உள்ளனர்? அரசியல் பேசவும் சனரஞ்சக மேடைகளில் சுயவிளம்பல்களை கொட்டவும் சுயவிளம்பரம் செய்து தம்மைத் தாமே பேசுபொருளாக்கும் விதத்தில் பேசவும் தெரிந்து வைத்திருக்கின்ற இளையவர்களால் எமது சமயத்துக்கும் மொழிக்கும் யாது பலனோ? சமய மேடைகளில் சுயபக்குவத்துடனும் தன்னடக்கத்துடனும் பேசாது தாம் எல்லாம் அறிந்தவர்கள் போல் பிரசங்கம் செய்யும் இளையவர்களாலும், கிடைக்கும் பணத்தை மட்டுமே கருதி அருச்சுனைஞர்களாகத் தம்மை ஆக்கிக்கொண்ட இளையவர்களால், எமது சமயத்துக்கும் மொழிக்கும் யாரு பலனோ? எம்முன்னே பொது எதிரியும் எம் ஆணிவேரைத்தாக்கி அழிக்கும் கறையான் கூட்டமும் வளர்ந்து போய் நிற்க, நாம் இவ்விதம் உழல்வது தகுமோ? இது காலப் பிழை யன்றோ? இப்போது நாம் இவற்றை விடுத்து பொது வழியில் இணைய மறுத்து ஒவ்வொருவரும் தனிவழிகள் அமைத்தால், எப்போதும் இந்த மண்ணில் எம்மால் தலை நிமிர்ந்து வாழமுடியாது போகும் என்பதை ஏன் நாம் அறிய மறுக்கின்றோம்?

கூட்டக முயற்சி செய்தாலன்றி எம் வழிபாட்டு உரிமைகளைக்கூட வென்றெடுக்க முடியாது. அறிவுக் கருவி கொண்டு ஆழச்சிந்தித்து ஆய்வு நோக்கில் எம் அடையாளங்களை ஆராய்ந்து அதை பொது அரங்கில் நிறுவத்தக்க ஆன்மீக இளைஞர் கூட்டணி ஒன்றை நாம் உருவாக்க உழைக்க வேண்டிய காலம் இது!

ஆன்மீகப்பாசறையில் உருவாக்கப்படும் இளைஞர்கள் வீரத்துறவிகளைப்போல், எதிலும் சலனமில்லா மனத்துடன் எமது சமயத்தைக்காக்க நேர் வழியிலும் சர்வதேசத் தொடர்பாடலுடன் கூடிய பரந்த வலையமைப்பை உருவாக்கத்தக்க விதத்திலும் செயலாற்றும் வகையில் பயிற்சி பெற்றவர்களாக இருந்தல் வேண்டும்! சித்தாந்த பதிஞானம் சேர்ந்த ஆற்றலாளர்களான இளையவர் தொகுதியினாலேயே வளம் மிக்க சமய வாழ்வியலையும் தடைகளற்ற வழிபாடுகளையும் இந்த மண்ணில் பாதுகாக்க முடியும்

திருச்சிற்றம்பலம்

# ஆடு தலையாக வரும் இளவேனில் சித்திரையே தமிழர் புத்தாண்டு

## இம்முறை பகைக்கேடு ஆண்டு, 13 இரவு 8.15 மணிக்குப் பிறக்கிறது

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தைத் திங்கள் மாற்றத்திற்கான முடிவுகள், எந்தப் புறக்கால வானியல் கணித அறிவியல் பின்புலம் இல்லாது, சாராது, தமிழ் ஐந்திர (பஞ்சாங்க) அறிவியல் கணிப்பின் பெயரா ஆடு ஆயப்புள்ளியோடு (Fiducial Goat Origin Point) ஆட்படாது, உட்படாது, தொல்காப்பியம், சங்கத்தமிழ், பிங்கல நிகண்டு, சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற நூல்களின் வழி கால ஆய்வு இல்லாது வெறுமனே தைப்பொங்கல் திருநாள் என்ற சிறப்பிற்காகவும், விடுமுறை தேவைக்காவும் மாற்றப்பட்ட ஆண்டுப் பிறப்புத் தான் தை. ஆகவே அதனை விடுத்து அறிவியலின் வழி தமிழர் பண்பாட்டு ஆழத்தினை பறைசாற்றும் சித்திரைப் புத்தாண்டை இழந்துவிடாமல் தொடர்வதே அறிவுவழி சந்ததியினரின் ஆற்றல்மிகு முடிவாகும்.

பெயரா ஆடு ஆயப்புள்ளியை (Fiducial Goat Origin Point) **ஆடு < ஆட்டை< யாடு, யாண்டு >** ஆண்டு என்று மருவிய சித்திரை மேழப்புத்தாண்டு பிறக்கும் குறியாக வானியல் அறிவியலின் அடிப்படையில் நமது சங்கத்தமிழ் கணிய வள்ளுவ பெருந்தகைகள் நிறுவினர். இதனைச் சங்கத்தமிழ் பெருங்குன்றூர் கிழார், பதிற்றுப்பத்தில் **(பதி.90: 51-54)**

**யாண்டு ஓரனைய ஆக யாண்டே**

என்று ஆடு மேழவிழுவில் சேர ஆகும் புத்தாண்டே என்று மிக நுட்பமான பதிவினைச்செய்வார்.

**திண்ணிலை மருப்பின் ஆடுதலையாக (பத்து.160),**

என்று சங்கத்தமிழ் நக்கீரர் (கி.பி 250) பத்துப்பாட்டு நெடுநல்வாடையில், ஆடு / மேழ ஓரை முதலாக இருப்பதை உறுதிசெய்வார். **வருடம் > வருடை = மலையாடு> மேடம்** அல்லது மேழம் எனும் ஆட்டைக் குறிக்கும் சொல்லாகவே நிற்பது மறுப்பதற்கில்லை.

**சித்திரை முதலாச் சென்மாத மிரண்டா – வைத்தனவெண்ணிக் கொள்கவென்ப (நிகண். பிங்கலம் 212)**

என்று பிங்கல நிகண்டு சித்திரையே ஆண்டுப்பிறப்பின் முதல் திங்கள் என்று தெளிவுப்பட எடுத்து விளக்கி இருக்கையில்

**தை இ நின்ற , தண் பெயல் கடை நாளை (அகம். 269/14)**

தை என்பது குளுமையின் கடை நாள் என்றே குறிப்பிடப்படுகின்ற தொல்காப்பிய ஆறு கால பகுப்பிற்கு முரணான அதனை முதல் நாளாக எடுப்பது தவறானதே.

சித்திரையில் நால் ஏழ் நாளினும் (7*4=28) அதாவது இருபத்தெட்டு (28) நாட்களுக்குக் கொண்டாடப்பட்ட ஒரே தமிழர் பெரு விழா தேவர்களை வழிபடும் இந்திர திருவிழா ஒன்றே என்று மணிமேகலை பதிவுசெய்திருப்பதையும் காண்க.

**மேலோர் விழைய விழாக் கோள் எடுத்த நால் ஏழ் நாளினும் நன்கு இனிது உறைக என அமரர் தலைவன் ஆங்கு அது (மணி. 105-108)**

சிலப்பதிகாரத்திலே பூம்புகார் நகரம் இந்திரவிழவூரெடுத்த காதையில்

**"சித்திரைச் சித்திரைத் திங்கள் சேர்ந்தென வெற்றிவேல் மன்னர்க்கு உற்றதை ஒழிக்கென" (வரி 64)"**

என்று ஊரார் விழாவெடுத்தைச் சொல்கிறது சிலம்பு. அங்கே ஊரின் முதுகுடிப் பெண்டிர் "பசியும் பிணியும் பகையும் நீங்கி வசியும் வளனும் சுரக்கென" (சிலம்பு: 5: 72-73) என்று பசியும் நோயும் பகையும் நீங்கி மழையும் வளமும் சுரக்க வாழ்த்துவதையும் காண்கிறோம்.

அத்துடன் வானோருக்குச் செய்யும் சிறப்பொடு பூசனைத் திருவிழா, திருவள்ளுவர் காலத்திலும் பெருவிழாவாக இருந்துள்ளதை

**சிறப்பொடு பூசனை செல்லாது வானம்**
**வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு (குறள். 18)**

திருவள்ளுவரும் மேலும் உறுதிப்படுத்தியிருந்தும், தற்கால தமிழ் அறிஞர்கள் இத்தகவல்களை தமிழர் கால கணிய அறிவியலுக்கு, தரவுகளாக்காது (Evidence), சான்றுகளாக்காது, கால பட்டகைகளை (Facts) முற்றிலும் அகப்படுத்தாது, தைப்புத்தாண்டு மாற்றத்தைக் கோரும் முடிவுகளை முனைந்து செய்திருப்பது, எத்தகைய தமிழ் கால மரபு திரிக்கும் முயற்சியாகும் என்பதை அன்பார்ந்தவர்கள் அறிந்துகொள்ளவேண்டும். இது தமிழர்களின் தொன்மையை மற்றும் வானியல் அறிவினைக் குறைத்து அளவிடும் வரலாற்றுச் சதி என்பதையும் உணர்ந்து கொள்ளவேண்டும்.

ஆதித் தமிழர்கள் நிலவின் துணைகொண்டு ஒரு திங்களினை வரையறுத்தனர். அதற்கு மேலும் காலத்தினை வலியுறுத்த சூரியனின் துணைகொண்டு ஆண்டுக் கணக்கினை உருவாக்கினார். பின்னர் அதற்கு மேல் உள்ள கால நீட்சியை உள்ளடக்க வியாழனின் சுழற்சியைக் கொண்டு பன்னிரண்டு ஆண்டுகளை எனும் வகுப்பினை ஏற்படுத்தினர். இதற்கும் மேல் செல்லமுனைந்த தமிழர்கள் சனியின் சுழற்சிகைக் கொண்டு முப்பது ஆண்டுக் கணக்கினை வகுத்து கொள்கின்றனர். இதில் இருந்து வந்த வெளிப்பாடே அறுபது ஆண்டு கால அமைப்பு முறை. இந்த அறுபது ஆண்டுகளின் பெயர்களை தமிழில் கீழே காணலாம்.

நற்றோன்றல், உயர்தோன்றல், வெள்ளொளி, பேருவகை, மக்கட்செல்வம், அயல்முனி, திருமுகம், தோற்றம், இளமை, மாழை, ஈச்சுரம், கூலவளம், முன்மை, நேர்நிரல், விளைபயன், ஓவியக்கதிர், நற்கதிர், தாங்கெழில், நிலவரையன், விரிமாண்பு,முற்றறிவு, முழுநிறைவு, தீர்பகை, வளமாற்றம், செய்நேர்த்தி, நற்குழவி, உயர்வாகை, வாகை, காதன்மை, வெம்முகம்,பொற்றடை, அட்டி, எழில்மாறல் , வீறியெழல், கீழறை, நற்செய்கை, மங்கலம், பகைக்கேடு, உலகநிறைவு, அருட்டோற்றம் , நச்சுப்புழை, பிணைவிரகு, அழகு, பொதுநிலை, இகல்வீறு, கழிவிரக்கம், நற்றலைமை, பெருமகிழ்ச்சி, பெருமறம், தாமரை, பொன்மை, கருமைவீச்சு, முன்னியமுடிதல், அழலி, கொடுமதி, பேரிகை, ஒடுங்கி, செம்மை, எதிரேற்றம், வளங்கலன் என்பவாகும்.

இதன் அடிப்படையிலே இராவணன் ஆண்ட இலங்கைத் தமிழர்கள் அத்துணை பேரும் புத்தாண்டினை சித்திரையிலேயே கொண்டாடி வருகின்றனர் என்பதனை கருத்தில் கொள்ளவும். அத்தினத்திலே காலையில் எழுந்து, மருத்துநீர் தேய்த்து நீராடி, புத்தாடை அணிந்து, கடவுள்,தெய்வங்கள் மற்றும் பெரியோரை வணங்கி, கோயிலுக்கு சென்று, உற்றார் உறவினர்களுக்கு சிற்றுண்டிகள் கொடுத்து, ஊருடன் கூடி குதூகலித்து கொண்டாடுவர்.

# சைவ ஆலயப் பூசைகள் மற்றும் ஓமங்களும் தமிழிற் செய்யலாம்

## மரபுவழி ஆதாரத்துடனான விளக்கம்

**மன்னுமாமலை மகேந்திரமதனில்**
**சொன்ன ஆகமம் தோற்றுவித்தருளியும்** - திருவாசகம்

தமிழே உலகின் மூத்தமொழி, அதில் வழிபாட்டு கூறுகள் நிறையவே உண்டு. காலஓட்டத்தில் அழிந்திருக்கலாம், அவற்றில் சிலவே தற்போது உள்ளன என்று திடமாக சிந்தித்து செந்தமிழ் ஆகம முறையில் வழிபாடுகள், கிரிகைகள் போன்றவற்றை முன்னெடுப்பதே தென்னாடு சிவமடத்தின் தலையாய நோக்கமாகும். தமிழ் வழிபாட்டிற்கு மறுப்பாக, ஆழம் அறியாமல் பொதுவெளியில் வெளியிடப்படும் கட்டுரைகளுக்கு மரபு வழி நின்றே மறுப்புகளை தரவேண்டும் என்ற நோக்கத்திற்காக இந்த கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

**சைவாலயப்பூசையும் ஓமங்களும் தமிழிற் கூடாதா?**
**(கடந்த திங்கள் தொடர்ச்சி)**

மேலும், மந்திரம் என்பது பதிவாக்கியமாகும். பாசவாக்கியங்களோ பசுவாக்கியங்களோ மந்திரமன்று. அதனாலேயே, வள்ளலார் பாடல்களைக் கோயிற் பூசையினுள் படிக்ககூடாது என்றார் நாவலர்பெருமான். எனவே, ஆகமத்திற் கூறப்பட்டுள்ள திருவைந்தெழுத்து முதலியனவே மந்திரங்களாகும். உதாரணத்திற்கு, சிவ சகஸ்ரநாமம் என்பது மகாபாரதத்தில் வருவது. இது தோத்திரமேயொழிய மந்திரம் அன்று! ஏனெனில் மகாபாரதம் ஒரு இதிகாசம். இது பதிவாக்கியம் அன்று! இருடிவாக்கியமேயாகும். பௌட்கர ஆகமத்தில் **“புருஷ வாக்கியங்களாலே இருஷி வாக்கியமும் இருஷிகளாலே தெய்வ வாக்கியமும் தேவராலே பிரமவாக்கியமும் பிரமாவாலே விஷ்ணு வாக்கியமும் விஷ்ணுவினாலே உருத்திரவாக்கியமும் உருத்திரனாலே சிவவாக்கியமும் வாதிக்கப்படுவதில்லை”** என்று கூறப்பட்டிருப்பதினால் சிவவாக்கியமே (பதிவாக்கியமே) உயர்வென்பது தெளிவாகும். திருஞானசம்பந்தப்பெருமான் **“எனதுரை தனதுரையாக”** என்று அருளிப்பாடியிருப்பதினாலும் பன்னிருதிருமுறைகள் சிவாகமத்தின் ஞானகாண்டம் என்று போற்றப்படுவதாலும், வடமொழி வேதத்தோத்திரங்களிலும் பன்னிருதிருமுறை மந்திரங்களேயாகும் என்பது பெறப்படும். எனவே, நாயன்மார் பாடியருளிப் படிகாசும் பொன்னும் நெல்மூட்டையும் பெற்றுக்கொண்ட திருமுறையைவிடுத்து, **“ராஜாதி ராஜாய ப்ரஸஹ்ய சாஹினே ....... குபேராய வைச்ரவணாய மஹாராஜாய நம:”** என்று ஓதுவதினால் பொன் கிடைக்கும் என்று நம்பி உழல்வது மூடத்தனமேயாகும். அதாவது கையில் வெண்ணெய் இருக்க நெய்க்கு அலைவானேன்? என்னும் நிலையினைச் சைவர் உணர்ந்தால் நன்று.

பூர்வ காமிகாகமம் அக்னி காரிய விதிப்படலத்தில்,

**‘வைதிகே கேவலாக்னை வா சிவமன்த்ரான் ந யோஜயேத ஸிவாக்ரை வைதிகா மந்தராச்சான்யே வா ஸம்ப்ரகீர்திதா”** (वैदिके केवलाग्नै वा शिवमन्त्रान् न योजयेत् ॥ शिवाग्नै वैदिका मन्त्राश्चान्ये वा सम्प्रकीर्तिता:।) **“வைதீக மற்றும் கேவலாக்னியில் சிவாகம மந்திரங்களை பயன்படுத்தக்கூடாது. சிவாக்னியில் வேத மற்றும் இதர சாத்திரங்களிலுள்ள மந்திரங்களை பயன்படுத்தலாம்”** என்பதனூடாக இதர சாத்திர மந்திரங்களைப் பயன்படுத்தலாம் என்று விதிக்கப்பட்டுள்ளது. அதாவது, வேத மந்திரத்தைப் பயன்படுத்திச்செய்யும் சிவாக்கினி மத்திமசிவாக்கினி என்றே அழைக்கப்படும் என்பதைத் தெளிக. அந்த மத்திம சிவாக்கினியில் வேத மந்திரங்களைப் பயன்படுத்தலாம் என்று கூறுகின்றது. மத்திம சிவாக்கினியிலேயே வேதத்தோடு இதர சாத்திரங்களும் பயன்படுத்தலாம் என்னும்போது, சிவாகம மந்திரங்களை மட்டுமே கொண்டுசெய்யும் உத்தம சிவாக்கினியில் சிவாகம ஞானகாண்டத்தின் திருமுறைகளைப் பயன்படுத்துவதை எங்ஙனம் பிழையென்று உரைக்கமுடியும்? சிவாகமமே இதர சாத்திரங்களைப் பயன்படுத்தலாம் என்று மத்திமசிவாக்கினிக்கு விதித்திருக்கையில், சிவாகமங்கள் மட்டுமே பயன்படுத்துதான் உத்தம சிவாக்கினி என்று கூறியிருக்கும்போது, அந்த உத்தமசிவாக்கினியில் சிவாகம ஞான காண்டத்தின் பன்னிருதிருமுறையினைப் பயன்படுத்துவது அதியுத்தமமாகுமேயொழிய, கம்பவாரிதியார் நினைப்பதுபோல் பிழையன்று. வேதம் முதலியன அபரம் என்று சைவப்பிரமாணவியலில் கொள்ளப்படுவதினால், அபரத்தினைச் சிவாகமப் பரத்தோடு சேர்த்தால் அது மத்திம நிலையினையே அடையும் என்று காமிகாகமம் கூறுவதால் பெறப்படும் தெளிவாகும். இன்று எமது சைவாலயங்களில் காமிகாகம விளக்கம் போதாமையினாலும் வடமொழிமோகத்தினாலும் மத்திமத்தர சிவாக்கினியே வளர்க்கப்பட்டுவருகின்றது. திருமுறைகளைக் கொண்டு சிவாகம மந்திரங்களோடு தமிழ்மொழிப் பிரயோகத்தில் செய்யும் ஓமம் எவ்வகையிலும் அதியுத்தமம் என்னும் நிலையில் இருந்து பிறழாதென்பதற்கு காமிகாகமமே சான்றாகும்.

மேலும், **“பாத்தியம் சமர்ப்பயாமி, அர்க்கியம் சமர்ப்பயாமி,ஆசமனியம் சமர்ப்பயாமி, தூபம் ஆக்ராபயாமி, தீபம் சந்தர்ஸ்யாமி, கந்தான் தாரயாமி”** என்பனவெல்லாம் மந்திரங்கள் அன்று. அவை வெறும் வாக்கியங்களேயாகும். **“திருவடி துலங்க நீர் ஏற்றருள்வீர்”** என்று கூறினால் சிவபெருமான் கோபித்துக்கொண்டு ஓடப்போவதில்லை. வாக்கியங்களை எந்தமொழியிலும் கூறிக்கொள்ளலாம். சிவபெருமானுக்கே விருப்பமான செந்தமிழ் மொழியிற் கூறினால் இன்னும் சிறப்பேயாகும். வடமொழிப்பிரயோகத்தில் சிவாக்கினி வளர்க்கும்போது பூசையில் பத்ததி ஆசிரியர் **“இதி த்யாத்வா”** என்று கூறிவிட்டுத் தியான மந்திரம் ஓதுவார். அப்போது குருக்கள் தியானிக்கத் தொடங்குவார். இதி த்யாத்வா என்றால் தியானஞ் செய்க என்பது பொருளாகும். **“இதி கண்டாம் சந்தாடயேத்”** என்று பத்ததிவாசிக்கும் அந்தணர் கூறுவார். உடனே, குருக்கள் மணி எடுத்து அடிப்பார். இப்படி, ஓமத்தில் அதனை இடுக, இதனை இடுக என்றெல்லாம் பத்ததி வாசிக்கும் அந்தணர் கூறிக்கொண்டிருப்பார். வடமொழி தெரியாதென்பதால் குருக்கள் தானாகவே எல்லாம் எடுத்தெடுத்து வரிசை குழம்பாது ஓமத்தில் இட்டுக்கொண்டுள்ளார் என்று மக்கள் சிந்தித்துக் கொண்டிருப்பார்கள். ஏதேனும் மறந்து அப்பொருள் இல்லையாயின், வடமொழியில் அதனை எடுத்துவருக என்று கூறுவர். ஆனால் இதனையெல்லாம் ஒன்றும் அறியாச்சனம் பத்ததி வாசிக்கும் அந்தணர் மந்திரம் ஓதிக்கொண்டுள்ளார் என்று நினைத்திருப்பர். வடமொழியென்றாலே மந்திரம் என்பது சுமார்த்தமதத்தின் சத்தப்பிரம்மவாதக்கொள்கை. சைவசமயம், மந்திரம் வேறு - தோத்திரம் வேறு - வாக்கியங்கள் வேறு என்ற தெளிவுடைய சமயம். எனவே, ஓதவேண்டிய சிவாகம மந்திரங்களைப் பயன்படுத்தி ஓமத்தின் செயற்பாட்டினை பிரான்சுமொழியிற்கூடச் செய்யலாம். இதனை இன்னும் தெளிவாகச் சொல்லவேண்டும் என்றால், வாழைப்பழத்தை ஏற்றருள்வீர் என்று சிவாக்கினியில் இட்டு, அவ்வேளையிற் சிவாயநம முதலிய சிவாகம மந்திரங்களை ஓதிக்கொள்ளலாம். திருமுறைகள் பதிவாக்கியமாகவும் பரவாக்கியமாகவும் விளங்கும் மந்திரங்களே என்பதால், திருமுறைகளை ஓதலாம். எந்தப்பிரயோகமொழியிலும் சிவாகம மந்திரங்களையும் பன்னிருதிருமுறையையும் கொண்டு சிவாக்கினி வளர்க்கலாம். வாழைப்பழத்தை ஏற்றருள்வீர் என்பது ஒரு விண்ணப்பம். அது மந்திரம் அல்ல! அதனை வடமொழியில் கூறினாலும் சிவபெருமான் ஏற்பார். தமிழ்மொழியிற் கூறினாலும் சிவபெருமான் ஏற்பார்! **“தமிழில் கூறாதே”** என்று கம்பவாரிதியார் உழல்வது தமிழ்மொழியின் அருமையினை உணராமை மட்டுமன்று சைவாலயப்பூசையில் வடமொழியில் என்னென்ன நடக்கின்றது என்பதில் போதிய அறிவு இன்மையினாலுமேயாகும்.

வைரவப்பெருமானுக்கு வடமொழியில் திரிசதி இல்லை. திரிசதி என்பது வடமொழியில் அர்ச்சனைக்குப் பயன்படும் முன்னூறு நாமத் தோத்திரமாகும். இலங்கையில் கோப்பாய்சிவம் என்னும் சிவானந்தசர்மா என்பவர், சகஸ்ர நாமத்திலும் அஷ்டோத்தரசதத்திலும் இருந்து வயிரவருக்குரிய நாமங்களைத் தொகுத்து வயிரவர் திரிசதி என்ற ஒன்றினை வெளியிட்டார். அதாவது வடமொழியில் இருந்தால் யாரும் எதிலும் இருந்து தொகுத்து வெளியிட்டால் அவை மந்திரம் என்னும் தகுதியைப் பெற்றுவிடுவதினை இதனால் நன்கு அறியலாம். சைவசமய அனுட்டானமே இல்லாத ஒருவர் சைவாலயக்கிரியைக்கு தொகுத்து அர்ச்சனைக்குப் பயன்படுத்த வடமொழியில் தோத்திரம் எழுதலாம் என்றால், சிவாகமங்களின் ஞானகாண்டமாகிய திருமுறைகளில் இருந்து சைவ சமய அனுட்டானம் உடையவர்கள் தொகுத்து அர்ச்சனைக்குப் பயன்படுத்துவது எங்ஙனம் தவறாகும்? தமிழ்த் திருமுறைகள் வடமொழி வேத புராண இதிகாச அபரவாக்கியங்களிலும் உயர்ந்த பரவாக்கியமாக இருக்கின்ற போதும், அதில் இருந்து தொகுத்து ஓதுவோர் செயலைக் கண்டிப்பது பெரும்விரோதமேயாகும்.



வைத்தியக் கலாநிதி
கி.பிரதாபன்
தலைவர் - இலங்கை
சைவநெறிக் கழகம்

**சுக்லாம்பரதரம், விஷ்ணும், சசிவர்ணம், சதுர்புஜம்;**
**ப்ரஸந்ந வதநம் த்யாயேத் ஸர்வ விக்நோபசாந்சயே;;**

என்பது விஷ்ணு சகஸ்ரநாமத்தில் வரும் மந்திரம். இதனைப் பிள்ளையார் துதியாகக் கொள்வாரும் உண்டு. மறுப்பாரும் உண்டு. அந்தச் சர்ச்சைக்குள் செல்லாது, சைவசமயிகளாகிய நாங்கள் சிந்திக்க வேண்டிய விடயம் ஒன்றுள்ளது. விஷ்ணு சகஸ்ரநாமம் என்பது மகாபாரதத்தில் வரும் தோத்திரமாகும். காமிக ஆகமப்படி அபரவாக்கிய நூலில் இருப்பதாகும். அபரவாக்கிய நூலில் விஷ்ணு பரத்துவம் சாதிக்கும் பகுதியில் உள்ள ‘’சுக்லாம்பரதரம்......” என்னும் தோத்திரத்தை மந்திரமாகக் கொண்டு சைவசமயக் கிரியைகளில் பயன்படுத்திவரும் சைவசமயத்தார், சிவபரத்துவம் சாதிக்கும் பரநூலாகிய சிவாகம ஞானகாண்டமாகிய பரவாக்கியம் என்று போற்றப்படும் பன்னிருதிருமுறையில் பதினொராந் திருமுறையில் விளங்கும்

**திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்**
**பெருவாக்கும் பீடும்பெருக்கும் உருவாக்கும்**
**ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்**
**காதலால் கூப்புவர்தம் கை**

என்னும் தமிழ்மந்திரத்தைப் பயன்படுத்தாமை ஏன்? பயன்படுத்துதலினைக் கண்டிப்பது ஏன்? இதற்குப் பெயரே மொழித்துவேசம் என்பர்! இவ்வாறு தமிழை நீசமொழியாகக் கொண்டு உழலும்வரை, சிவஞானம் வாய்க்கப்போவதில்லை!!!

இரௌரவ ஆகம வித்யாபாதம் தந்திராவதார படலத்தில்

यावन्तो रुद्र देवाश्च रक्षोक्षमहेश्वरा: ।
तावन्मन्त्रा: समाख्यातास्तेषां संख्या न वद्यिते ॥ २५ ॥
देशभाषानबिद्धाश्च दवि्याक्षरपदैर्युता: ।

**இதன் பொருள்: எத்தனை ருத்ரர்களோ, தேவர்களோ, ராக்ஷசர்களோ, யக்ஷர்களோ, மஹேசுவரர்களோ அத்துனை மந்திரங்கள். அவற்றின் எண்ணிக்கையை அறியவியலாது. அவை உலகிலுள்ள வெவ்வேறு தேசங்களுக்கும் மொழிகளுக்கும் ஏற்ப வெவ்வேறாய் அமைக்கப்பட்டுள்ளன. புனிதமான அக்ஷரங்களாலும் சொற்களாலும் ஆனவை.**

இதனால் மந்திரங்கள் வடமொழியில் மட்டுமே உண்டு என்று உழல்வோர் சிவாகமவிரோதிகளேயாகும்! சிவபாதகர்களேயாகும்!


சுவாகா முதலிய சப்தகோடி மந்திரங்கள் முதலியன ஒலியேயொழிய மொழியன்று. எனவே, சிவாகமங்களில் விளங்கும் மந்திரங்களை அவ்வாறே பயன்படுத்தி, தமிழ்த் திருமுறை மந்திரங்களையும் பயன்படுத்திச் செய்யும் பூசையும் ஓமமும் சிவாகமத்தினால் அதியுத்தம பூசையாகவே கொள்ளப்படுகின்றதென்று தெளிதல் சான்றோர் கடன்! ‘’ஏற்றருள்வீர்” முதலிய கிரியைப் பிரயோகமொழி உலகில் உள்ள எந்தமொழியாகவும் இருக்கலாம் என்பதால், தமிழில் இருத்தல் தமிழரிடம் வேண்டப்படுவதாகும். இக்கட்டுரை தனித்தமிழ்க் கட்டுரையும் அன்று! இக்கட்டுரையால் சிவாகமங்களால் அபரம் என்று உரைக்கப்பட்டுள்ள வேத புராண இதிகாசங்களை அபரம் என்னும் நிலையில் மதிக்கப்படுதலினை நிராகரிக்கும் நோக்கும் அன்று! தமிழிற் செய்வது கூடாது என்ற கம்பவாரிதியாரின் நிலைப்பாடு தவறென்று விளக்கும் நோக்கே இக்கட்டுரையாகும்.

**எல்லாம் திருவருட் சம்மதம்**

கட்டுரைக் கருத்துக்கள் எழுத்தாளருக்குரியது.

**சைவ ஆலயப் பூசைகள் மற்றும்**

# சைவத்தை அறிமின் சிவத்தை அறிமின்



**உயிரின் அவத்தை என்று கூறப்படுவது எது?**

அவத்தை (அவஸ்தை) என்பது நிலை என்று பொருள்படும். உயிர் உணர்வு பெறும் நிலைகள் அவத்தைகள் என்று சைவ தத்துவத்தில் கூறப்படுகின்றன.

சகலத்தில் உயிரின் உணர்வு தொடர்பான அனுபவ நிலைகளை ஐந்தாகப் பிரித்து ஐந்தவத்தை என்பர். இது நாளாந்தம் உயிர் மாறி மாறிப் பெறும் உணர்வு நிலைகளாகும். இவற்றில் முப்பத்தாறு தத்துவங்களும் அவற்றின் காரியமான தாத்துவிகங்களும் தொடர்புபடும். பொதுவாக நாம் 'நாளாந்தம் பெறும் அனுபவங்கள் தெளிவாக அறியக் கூடியவை. உணர்வு நிலையில் இவற்றை அறிவதில் தெளிவற்ற தன்மை இருக்கும்.

உயிர் ஐந்தவத்தை உறும்போது, ஒவ்வொன்றிலும் சில கருவிகளுடன் கூடியும் பிரிந்தும், ஒவ்வொரு இடத்தில் நிற்கும் என்பர். இவை வருமாறு:

**1. சாக்கிரம் (கனவு நிலை) :** இந்த அவத்தையில் உயிர் நெற்றி நடுவில் (இலாடத்தானத்தில்) 35 தத்துவங்களுடன் கூடி நிற்கும். இத் தத்துவங்கள் ஞானேந்திரியம் (5), கன்மேந்திரியம் (5), சத்தாதி விடயம் (5), வசனாதி விடயங்கள் (5), வாயுக்கள் (10). அந்தக் கரணம் (4), புருட தத்துவம் (1) ஆகும்.

**2. சொப்பனம் (கனவு நிலை) :** இதில் உயிர் கண்டத்தில் நிற்கும். அப்பொழுது செயற்படும் கருவிகள் 25. அவையாவன, சத்தாதி விடயம் (5), வசனாதி விடயம் (5), வாயுக்கள் (10), அந்தக்கரணம் (4), புருடன் (1).

**3. சுழுத்தி (உறக்கநிலை) :** இதில் உயிர் இதயத்தில், பிராணன், சித்தம், புருடன் என்னும் மூன்று கருவிகளுடன் நிற்கும்.

**4. துரியம் (பேருறக்க நிலை) :** இதில் உயிர் நாபியில் புருடன், பிராணன் என்னும் இரண்டு கருவிகளுடன் நிற்கும்.

**5. துரியாதீதம் (உயிர்ப்படக்க நிலை) :** இதில் உயிர் மூலாதாரத்தில் புருடன் என்னும் ஒரு கருவியுடன் நிற்கும்.

மேற்குறிப்பிட்ட சத்தாதி விடயம் என்பன; ஞானேந்திரியங்களின் ஆற்றல்களைக் குறிப்பன. இவை சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பன் தன் மாத்திரைகளல்ல. தன் மாத்திரைகள் மாத்திரைகள் பஞ்சபூதம் தோன்றுவதற்குக் காரணமாய் உள்ளவை; சூக்கும பூதங்கள் எனக் கூறப்படுபவை. வசனாதி விடயங்கள் கன்மேந்திரியங்களின் ஆற்றல்களைக் குறிப்பன.

சாக்கிரதத்தில் தொடங்கி, கீழ் நோக்கி, துரியாதீதம் வரை உயிர் இறங்கும். இந்நிகழ்வில் ஒவ்வொரு இடத்திலும் உயிர் அந்த அந்த இடத்தில் கருவிகளின் ஒவ்வொரு பகுதியை நிறுத்தி இறங்கும். இங்ஙனம் துரியாதீத அவத்தையுற்ற உயிர் திரும்பவும் மேல் நோக்கி செல்லும். அப்பொழுது ஒவ்வொரு இடத்தில் விட்ட கருவிகளைச் சேர்த்துச் செல்லும். இந்த இரு நிகழ்வும் கீழாலவத்தை எனப்படும்.

இவற்றை விட நெற்றி நடுவில் உயிர் சாக்கிரத்தில் நிற்கும் நிலையிலும் ஐந்தவத்தைப் படும். இது மத்தியா லவத்தை எனப்படும். இது தவிர மேலாலவத்தை என்ற ஒரு நிலையும் உண்டு. இது யோக நெறியில் நிற்கும் ஆன்மீகப் பயிற்சியுடன் தொடர்புடையது. (விரிவைச் சித்தாந்த நூல்களில் காண்க).

மேற்கூறப்பட்ட அவத்தைகள் உயிரின் வினை அனுபவங்கள், பிறவி எடுத்தல், நீங்குதல் ஆகிய காரியங்களுடன் தொடர்புடையன. அதனால் இவை காரியாலவத்தை எனவும் சொல்லப்படும். கேவலம், சகலம், சுத்தம் ஆகிய உயிரின் நிலைகள் காரணாவத்தை எனப்படும்.

**ஆன்மா அனுபவம் பெறுவதும், அதன் வினையும் பிறவியும் மாறி மாறித் தொடர்ந்து வருவதும் பற்றிய விளக்கங்கள் தரப்பட்டன. இவைகள் இங்ஙனமே தொடர்ந்தால் ஆன்மா விடுதலை பெறுவது எங்ஙனம்?**

வினை அல்லது கன்மத்தின் மூலம் ஆன்மா அறிவு விளக்கம் பெறப்பெற, ஆணவத்தின் பிடி சிறிது சிறிதாக நீங்குகிறது. ஒவ்வொருவரும் வாழ்கில் நற்பண்புக் கூறுகளை வளர்க்க வேண்டுமென்று சைவசமயம் வலியுறுத்துகிறது.

சைவ மக்களின் முழுமுதற் கடவுளாகிய சிவன், மங்களம், அன்பு, அறிவு, தயை, நற்குணம் ஆகியவற்றின் நிறை பொருளாக உள்ளான். சைவன் என்பவன் தன் எண்ணம், சொல், செயல் மூன்றிலும் தான் வணங்கும் சிவனின் தன்மைகளை வளர்க்க வேண்டும். திருமுறைகளைப் பக்தியுடன் பாராயணம் செய்வதும், சித்தாந்த சாத்திர நூல்களைப் படித்துத் தெளிவு பெறுதலும், அகமாற்றத்தை உண்டு பண்ணி சிவனருள் வழியிற் செல்லத் துணை புரியும். இந்நிலையில் இறைவன் எனக்கு அன்னியம் இல்லாதவன், எனக்குள்ளே இருக்கிறான் என்ற உறுதியான நம்பிக்கை பிறக்கும்.

இறைவன் உள்ளிருந்தோ அல்லது குருமூலமோ இந்த உணர்வையூட்டி மெஞ்ஞானத்தை அருளுவான். அப்பொழுது, நான், எனது என்ற உணர்வு நீங்கி, ஆணவத்தின் பிடி தளரும். ஆன்மாவின் தன்னறிவு (உண்மை ஞானம்) ஒளிரும். இந்த நிலை மலபரிபாகம் எனப்படும்.

மலபரிபாக அனுபவத்துடன், இன்பம் துன்பம், நல்வினை தீவினை ஆகியவற்றைச் சமமாக நோக்கும் நிலை பிறக்கும். இந்த நிலை இருவினையொப்பு எனப்படும். இந்த நிலைகளை அடைந்த உயிர் இறையருளைப் பெறும் பக்குவத்தை அடையும். இந்நிலையில் உயிரை இறையருள் ஆட்கொள்ளும். இது சத்திநிபாதம் எனப்படும். சத்தி-இறையருள் நிபாதம் - கீழ் இறங்கல். இதன்பின் உயிர் தன் பந்த நிலை நீங்கி விடுதலை அடையும். இது வீடு அல்லது முத்தி எனப்படும்.

**உயிரின் பந்த நிலை நீங்குதல், முத்தி அடைதல் ஆகிய இரண்டிலும், உயிர் பெறும் அனுபவங்கள் நூல்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளனவா?**

பந்த நிலையிலுள்ள உயிரின் பாசம் அகன்று இறைவனை அடையும் வரை உயிர்பெறும் அனுபவ நிலையை பத்துப் படிநிலையில் வைத்து தசகாரியம் என்று சில நூல்கள் விளக்குகின்றன. இவற்றை இரண்டாக, மூன்றாக, முப்பதாக வகுத்துக் கூறும் நூல்களும் உள்ளன. (தசகாரியம் பற்றிய செய்தி இந்நூலில் இறுதியில் 'ஞானச்செயல்' என்ற பகுதியில் தரப்பட்டுள்ளது.)

**சொர்க்கம் நரகம் என்பவை என்ன? அவற்றில் உயிர் பெறும் அனுபவம் எத்தகையது?**

உலக வாழ்வில் உயிர் தான் முன் செய்த வினைப் பலன்களை இன்பமும் தும்பமும் கலந்த அனுபவங்களாகப் பெறுகிறது. இறப்பின்பின், மறு-பிறவி எடுக்கமுன், அது இடைநிலையில் நின்று இன்பத்தையும் துன்பத்தையும் தனித்தனியாக அனுபவிக்கிறது. இன்பத்தை மட்டும் அனுபவிக்கும் இந்த நிலை சொர்க்கம் எனப்படுகிறது. துன்பத்தை மட்டுமே அனுபவிக்கும் நிலை நரகம் எனப்படுகிறது. இந்த அனுபவங்களைச் சொர்க்கம் நரகம் ஆகிய நிலைகளில் பெறுவதற்கு ஏற்ற நுண்ணுடம்பு களையும் அது பெறுகிறது. இவை முறையே பூதசார சரீரம் என்றும் யாதனா சரீரம் என்றும் கூறப்படும். சொர்க்கத்திலும் நரகத்திலும் இன்ப துன்ப அனுபவங்களைப் பெற்றதும் இச்சரீரங்களின் தேவையும் இல்லாமல் போய்விடும். இத்துடன் ஒரு பிறவி வட்டம் (cycle) முடிவுறும். பின்னர் உயிர் இன்னொரு பிறவி எடுத்து வினைப்பலனை அனுபவிக்கும்.

**உயிர் ஒரு பிறவியில் செய்யும் வினையின் பலன் உயிரைத் தொடர்ந்து அடுத்த பிறவிகளுக்கு வருவதெப்படி?**

கேவலத்தில் உயிருக்கு இறைவன் படைத்தளித்த நுண்ணுடம்பு புரியட்டகாயம் எனக் கண்டோம். இந்த நுண்ணுடம்பு, உயிர் முத்தியடையும் வரை, உயிருடன் சேர்ந்து சென்று கொண்டே இருக்கும். புரியட்டகாயத்தில் உள்ள புத்தி தத்துவத்தில் வினைப் பலன்கள் புண்ணிய பாவப் பதிவுகளாகத் தங்கி உயிருடன் செல்கின்றன. நல்வினைப் பலன் புண்ணியம், தீவினைப்பலன் பாவம்.


திருச்சிற்றம்பலம்

**மூலம் - சைவ சித்தாந்த வினாவிடை**
**(கலாநிதி க.கணேசலிங்கம்)**

# கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை தாயுமானவர் சுவாமி திருக்கோயிலில் முதலாவது பெருஞ்சிவனிரவு வழிபாடுகள்



# கொக்குவில் இந்துக் கல்லூரி அண்ணாமலையார் திருக்கோயிலில் முதலாவது பெருஞ்சிவனிரவு வழிபாடுகள்



# ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்-

## அருள்மிகு கனகாம்பிகை உடனுறை உச்சிநாதேசுவரர் திருக்கோயில் – திருநெல்வாயில்(சிவபுரி)

## தேவாரப் பாடல்பெற்ற 274 சிவபுரங்களில் 3ஆவது திருக்கோயில் திருநெல்வாயில் ( சிவபுரி )



**"நிறையினார நெல்வாயிலார் தொழும் இறைவனாரெம துச்சி யாரே."**

எல்லாவற்றிக்கும் மேலானவனான எம்பெருமான் அடியார்க்கு அருள்பவராய், திருஞானசம்பந்தருக்கும் அவருடன் வந்திருந்த அறுபத்து மூன்று அடியார்களுக்கும், பணியாளாய் நின்று அமுது செய்வித்து அருளிய அற்புதத் தலமே அருள்மிகு கனகாம்பிகை உடனுறை உச்சிநாதேசுவரர் உறையும் திருநெல்வாயில் திருத்தலம்.

**அமைவிடம்: கடலூர் மாவட்டம், தமிழ்நாடு**

சிவபுரி சிதம்பரத்திற்கு தென்கிழக்கே 5 கி. மீ. தொலைவில் உள்ளது. தற்காலத்தில் 'சிவபுரி' என்று அழைக்கப்படுகிறது. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு தெற்கில் 3 கி.மீ. தொலைவில் உள்ளது. சிதம்பரம் பேருந்து நிலையத்திலிருந்து 4 கி.மீ. தொலைவில் உள்ளது.



**இறைவர் திருப்பெயர்: உச்சிநாதர், உச்சிநாதேசுவரர்.**
**இறைவியார் திருப்பெயர்: கனகாம்பிகை.**
**கோயில் மரம்: நெல்லி மரம்.**
**தீர்த்தம்: கனக தீர்த்தம், கிருபா சமுத்திரம், திருக்குளம்**

**வழிபட்டோர்: சம்பந்தர், அகத்தியர், கண்வ மாமுனிவர், அருணகிரிநாதர் முதலியோர்.**
**பாமாலை: திருஞானசம்பந்தர், அருணகிரி நாதர்.**

### திருத்தலத்தின் மீது பாடப்பட்டத் திருப்பதிகங்கள்
### திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகம்

**புடையி னார்புள்ளி கால்பொ ருந்திய**
**மடையி னார்மணி நீர்நெல் வாயிலார்**
**நடையி னால்விரற் கோவ ணந்நயந்**
**துடையி னாரெம துச்சி யாரே** (2-26-1)

### திருத்தலச் சிறப்பு

சிவபெருமான் அகத்திய சித்தருக்கு காட்சி தந்த தலங்களில் ஒன்றாக இந்த உச்சிநாதர் திருக்கோயில் இருக்கிறது. தேவாரப் பாடல் பெற்ற தலங்களில் இது மூன்றாவது தலமாகவும் விளங்குகின்றது. இக்கோயிலின் மூலவர் சிவலிங்கத்திற்கு பின்புறம் அம்மையப்பர் திருமண கோலத்தில் காட்சி அளிக்கின்றனர். சிதம்பரம் பகுதிக்குட்பட்ட நெல்வயல்கள் அதிகம் சூழ்ந்த பகுதியாக இது இருந்ததால் இது திருநெல்வாயில் என அழைக்கப்பட்டது. தற்போது இந்த ஊர் சிவபுரி என்று அழைக்கப்படுகிறது. அருணகிரிநாதர் இத்தலத்து முருகப் பெருமானைத் தமது திருப்புகழில் பாடியுள்ளார்.

பசியுடன் வந்த ஞானசம்பந்த பெருமானுக்கும் அவருடன் வந்த அடியார்கள் அறுபத்து மூன்று பேருக்கும் எம்பெருமான் பணியாளாக நின்று அமுது அளித்தமையால் இத்தலம் சிறப்பு பெறுகின்றது. இக்கோயிலில் வந்து தங்களுக்கு பிறந்த குழந்தைகளுக்கு சோறு ஊட்டும் சடங்கை



செய்யும் பெற்றோர்களின் குழந்தைகள் அம்மையப்பரின் அருளால் அவர்களின் வாழ்நாளில் உணவிற்கு குறை, வறுமை ஆகியவை ஏற்படாது வாழ்வர் என்பது தொன் நம்பிக்கை.

### திருத்தல வரலாறு

திருஞானசம்பந்தர் திருவேட்களத்தில் தங்கி, அங்கிருந்து மற்ற கோயில்களுக்குச் சென்று வழிபட்டு வந்ததாக நம்பப்படுகிறது. அவ்வாறு இருக்கையில் ஒரு சமயம் தன்னுடைய திருமணத்திற்காக அறுபத்து மூன்று அடியார்களுடன் இந்த தலம் வந்த போது சம்பந்தரும், அவருடன் வந்தவர்களும் பசியுடன் இருப்பதை அறிந்த இத்தல இறைவன், கோயில் அர்ச்சகர் வடிவில் வந்து அனைவருக்கும் அறுசுவை விருந்தளித்து அருள் புரிந்தார்.

இதனால் இத்தல இறைவன் உச்சிநாதர் என்று அழைக்கப்படுகிறார். **"உச்சி"** என்றால் நண்பகல் என்றும், **"நாதர்"** என்றால் இறைவன் என்றும் பொருள்படுகிறது. சமஸ்கிருதத்தில் இறைவன் **"ஸ்ரீமத்யானேஸ்வரர்"** என்று அழைக்கப்படுகிறார். அம்பாள் கனகாம்பிகை என்று அழைக்கப்படுகிறார். இக்கோயிலின் தலமரமாக நெல்லி மரம் இருக்கிறது. கோயிலின் தீர்த்தம் கிருபா தீர்த்தம் என்று அழைக்கப்படுகிறது. உமையம்மையிடம் ஞானப்பால் உண்ட சம்பந்தருக்கு உணவளித்த திருத்தலமாக இது விளங்குகிறது.

### திருக்கோயில் அமைப்பு

இத்திருக்கோயில் கிழக்கு நோக்கிய கோயில். எதிரில் நீராழி மண்டபத்துடன் குளம் உள்ளது.



ஐந்து நிலைகளுடன் காட்சி தரும் இராச கோபுரத்தைக் கடந்து உட்சென்றால் வீதியில் விநாயகர் சந்நிதி. அடுத்து சுப்பிரமணியர், பஞ்சலிங்கங்கள், பைரவர், சனிபகவான், சந்திரன் முதலிய சந் நிதிகள் உள்ளன. வலம் முடித்த முன் மண்டபம் சென்றால் வலப்பால் ஒன்பான் கோள்கள் (நவக்கிரகம்) சந்நிதியும் பள்ளியறையும் உள்ளன.

வாயிற் காவலர்களைக் கடந்தால் வலப்பால் அம்பாள் சந்நிதி உள்ளது. நின்ற திருக்கோலம். நடராச சபையில் சிவகாமியுடன் நடராசர். நேரே சுவாமி - மூலவர். இலிங்கத் திருமேனி உயரமும் பருமனும் குறைந்த அமைப்புடையது. சதுர பீடம் சுற்றளவில் சிறியது. முன்மண்டபத்தில் நந்தியைச் சுற்றியுள்ள முன், பின் இரு தூண்களில் நால்வர் சிற்பங்கள் உள்ளன.

பக்கத்தில் உள்ள தலங்கள் திருவேட்களம், திருக்கழிப்பாலை. நாடொறும் ஐந்து கால வழிபாடுகள். வைகாசி விசாகத்தில் பஞ்ச மூர்த்திகள் புறப்பாடு உண்டு.

**திருச்சிற்றம்பலம்**

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**

# சிவபூமியில் சிவனைத் தேடி

## 10ம் நூற்றாண்டளவில் சோழர்களின் ஆதிக்கம் பெற்றிருந்த பொலன்னறுவை முதலாம் சிவன் கோயில்

சோழர்களுடைய ஏகாதிபத்தியமும் வாணிபமும் தமிழ்நாட்டின் பண்பாட்டை வெளியே பரவுவதற்கு ஏதுவாக இருந்த சூழ்நிலையில், வட இலங்கையில் சோழரின் ஆதிக்கம் பொலன்னறுவை, அதனை அண்டியுள்ள பகுதிகளிலும் செல்வாக்குப் பெற்றது. 7 ஆம் நூற்றாண்டு முதலாக ஒரு படைத்தளமாக, பிரதான நகரமாக 'கந்தவுறுநுவர' எனும் பெயர் பெற்றிருந்த பொலன்னறுவையை, சோழர் கைப்பற்றி அந்நகரை ஈழமான மும்முடிச் சோழமண்டலத்தின் பிரதான நிர்வாக பீடமாகவும், படைத்தளமாகவும் அமைத்துக் கொண்டு அதற்கு 'ஜனநாதபுரம்' (ஜனநாதமங்கலம்) என்று பெயரிட்டனர். இராசராச சோழன் சூடிக் கொண்ட பல பட்டப் பெயர்களில் 'ஜனநாதன்' என்ற விருதும் ஒன்று. அதுவே பொலன்னறுவையின் பழைய பெயராகவும் விளங்கியுள்ளது.



இலங்கையின் ஈழம் மும்முடிச் சோழ மண்டலமாக விளங்கியமைக்கு ஜனநாதபுரத்தில் அழிந்தும், அழியாமலும் தேங்கிக் கிடக்கும் கட்டடங்களின் எச்சங்கள், அவர்கள் எமக்களித்த வரலாற்றுப் பரிசுகளாகும். முதலாம் விஜயபாகு 1070 ஆம் ஆண்டு சோழரைத் தோற்கடித்ததைத் தொடர்ந்து, ஜனநாதபுரம் அவன் வசமாகியது. அவன் அங்கு சோழர்கள் கட்டுவித்த வழிபாட் டுக் கட்டடங்களுக்குச் சேதங்களை உருவாக்கி, சங்கத்தாருக்கு பெரும் பள்ளிகளை அமைத்துக் கொடுத்தான். நெடுங்காலத்திற்குப் பின்பு பொலன்னறுவையை அகழ்வாராய்ச்சி



செய்ததன் பலனாக பத்து சிவன் கோயில்களும், ஐந்து பெருமாள் கோயிலும், ஒரு காளி கோயிலும் வெளிப்பட்டதாக கலாநிதி இந்திர பாலா (இலங்கையில் திராவிடக் கட்டடக் கலை - நூல்) கூறுகிறார். பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்கள் பொலன்னறுவையில் இதுவரை எல்லாமாக 14 இந்துக் கோயில்களின் அழிபாடுகள் காணப்பட்டுள்ளன. அவற்றுள் ஏழு சிவாலயங்கள், மூன்று பெருமாள் கோயில்கள், ஒரு அம்மன் கோயில், ஏனையவை அடையாளம் காண முடியாதவை என்று (இலங்கையில் இந்து சமயம் - நூல்) கூறுகின்றார்.

ஜனநாதபுரத்தில் அமைந்துள்ள ஏழு சிவாலயங்களில் முதலாம் இலக்கம் என்று இனங்காட்டப்பட்டுள்ளதால் அது முதலாம் சிவாலயம் என அழைக்கப்படுகின்றது. இக்கோயில் தூபாராமம், வட்டதாகே போன்ற பௌத்த வழிபாட்டு இடங்கள் அமைந்துள்ள நாற்சதுர மேடையின் தெற்குப் புறத்தில் அமைந்திருக்கின்றது. கட்டடக்கலை வல்லுனர்கள் இக் கோயில் பாண்டியர் பாணியில் கட்டப்பட்ட திராவிடக் கட்டுமாணம் என்றும் சைவாலயம் என்றும் உறுதிப்படுத்தியுள்ளனர். சுமார் 100 வருடங்களுக்கு மேலாக இக்கோயிலைப் பலர் புத்த தந்த தாதுக் கோயில் என்று நம்பி வந்துள்ளனர். 1907 இல் இடம் பெற்ற அகழ்வாராய்ச்சியில் தான் இது ஒரு சைவக் கோயில் என்பது அறிய முடிந்தது. இது பற்றி தொல்பொருட் திணைக்களத்து ஆணையாளர் எச்.சீ. பி. பெல் என்பவர் மேல்வருமாறு கூறும் கருத்து இவ்விடத்தில் கவனிக்கப் படக்கூடியது.

"கல் விகாரை நீங்கலாகவுள்ள கட்டடங்களில் அதுவே பொலநறுவையினைப் பார்க்கச் செல்வோரின் கூடுதலான கவனத்தைப் பெற்றது. அது முற்றிலும் கற்றளியாக அமைந்த கோயிலாகும். அது இதுவரை பல வருடங்களாகத் தலதா மாளிகை என்று பிழையாக வர்ணிக்கப்பட்டது. இன்று வரையும் அதனைப் பற்றிப் பொது சனங்களிடையே நிலவிவரும் நம்பிக்கையும் அதுவேயாகும்"

இவ் ஆலயம் உருவாக்கப்பட்ட காலம் பற்றி பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்கள் "இலங்கையில் இந்து சமயம்" என்ற நூலில் கீழ்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"அது 12 ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டதென்று கருதலாம். அரண்மனையிலே சைவசமயத்தின் செல்வாக்கு மேலோங்கியிருந்த காலப்பகுதியில் விக்கிரமபாகு, இரண்டாம் கஜபாகு ஆகியோரின் காலத்தில் அது அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்."

பேராசிரியர், சி. ப அவர்களின் கருத்துப்படி இக்கோயில் பிற்காலச் சோழர் கலைப் பாணிக்குரியதாகக் கருதலாம் என்கின்றார். முதலாம் குலோத்துங்க அரசரின் மேலைக்கடம்பூர் கோயிலை ஒத்த கட்டட உறுப்புக்கள் இக்கோயிலில் தென்படுவதாகக் குறிப்பிடுகிறார். இக்கோயிலை அமைப்பதற்கு உருவாக்கப்பட்ட கற்கள் மிகவும் பளபளப்பும் வெண்மையும் பச்சையும் இழையோடிய வண்ணநிறங் கொண்டவை. இக் கோயில் கற்றளிக் கட்டுமாணம் ஆகும். மேல் உள்ள விமானம் மட்டும் செங்கற்களால் அமைந்தவை, அதுவும் சிதைந்துவிட்ட நிலையில் உள்ளது. கருவறை கற்பாளங்களைச் செதுக்கிக் கட்டப்பட்டுள்ளது வெளிப்புறச் சுவர்கள் ஒரே விதமாக அமைந்துள்ளன. அவற்றில் தேவ கோட்டங்களும், சிதைந்த கடவுளர் திருமேனிகளும், அரைத் தூண்களும், அலங்காரங்களும் சிறப்பாக அமைந்துள்ளது. அதன் அத்திவாரம் பத்மதளம், கால், வரி, கலசம், பத்ம இதழ் பலகை, போதிகை, உபானம் முதலான உறுப்புக்கள் கவர்ச்சியாக அமைக்கப்பட்டுள்ளன.

கருவறைக்கும் மண்டபத்திற்கும் இடையில் அந்தராளம் எனம் உறுப்பு சிறப்பாக அமைந்துள்ளது. அதன் ஒரு பக்கங்களிலுமுள்ள வழிகளில் தோரணங்களைத் தாங்கும் அலங்காரத் தூண்கள் காணப்படுகின்றது. பெரு மண்டபத்தின் அடித்தளம் மட்டுமே எஞ்சியுள்ளது. அது விசாலமான நீள அகலமுடையது. அதனுள் மூன்று பரிபார தேவர் கோட்டங்களும் சிதைந்த நிலையில் உள்ளது. அம்மண்டபத்தின் இரு மருங்கிலும் தகர்க்கப்பட்ட நிலையில் வாயிற் காவலர்களின் சிதைவுகள் காணப்படுகின்றது.

இக் கோயிலின் கட்டடத்தை முன்பு குறிப்பிட்ட தொல்பொருட் திணைக்களத்து ஆணையாளர் கீழ்வருமாறு வர்ணித்துள்ளார்.

"இரண்டாம் சிவாலயத்தைப் போல, அதினிற் சற்று சிறியதும் கூடிய அலங்காரத் தன்மை கொண்டதுமான இக்கோயில் வழமையான, மூன்று தனித்தனியான பகுதிகளைக் கொண்டிருந்தது. அவை இணைக்கப்பட்டு, ஒரே வரிசையில் அமைக்கப்பட்டுள்ளன. வெளிப்புறமாக அமைந்துள்ள மண்டபத்தில் சுவர்கள் உள்ளன. ஆனால் அதன் கூரை சிதைந்து அழிந்து விட்டது."



சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு

முதலாம் சிவாலயத்திற்கு பல தனிச் சிறப்புக்கள் உள்ளன. இந்தக் கோயில் தென்னிந்திய சிற்ப சாத்திர முறைகளுக்கு ஏற்பவும், சிவாகம வழிகாட்டுதலுக்கு ஏற்பவும், சைவசமய வழிபாட்டுத் தேவைகளுக்கு வேண்டிய சில மாற்றங்களுடன் அமைக்கப்பட்ட ஆலயமாகக் திகழ்ந்துள்ளது. இவ் ஆலயம் அமைந்துள்ள சூழலை நோக்கும் போது, பௌத்த வழிபாட்டு இடங்களுக்கு அருகாமையில் அமைந்திருந்த படியால் சமரச வழிபாட்டுக் கோயிலாகவும் இருந்திருக்க வாய்ப்புண்டு. முதலாம் பராக்கிரமபாகுவின் காலத்திற்கு முன் ஆட்சி புரிந்த அரசர்கள் வாழ்ந்த அரண்மனையின் அண்மையில் இது அமைந்திருப்பதனால் இது அரண்மனை வாசிகளினதும், அரசப்பிரமுகர்களின் தேவைகளுக்கும் உருவாக்கப்பட்ட ஆலயமாகவும் விளங்கியிருக்க வாய்ப்புள்ளது. பொலன்னறுவைக் கால கட்டடக் கலையைப் பொறுத்த வரையில் வானவன் மாதேவி ஈசுவரத்தை அடுத்துச் சிறப்புப் பெற்ற சிவாலயமாகவும் இது திகழ்கின்றது. ஏனெனில் வானவன் மாதேவி ஈசுவரத்தில் இல்லாத கட்டட நுட்பங்களும், அலங்கார வேலைப்பாடுகளும், வழிபாட்டு விக்கிரகங்களும் இச் சிவாலயத்தில் இருப்பதுவே ஆகும்.

1907 ஆம் ஆண்டு முதல் வெவ்வேறு காலகட்டங்களில் நடைபெற்ற அகழ்வுகளின் போது இச்சிவாலயத்தில் கிடைத்துள்ள வெண்கலச் சிலைகள் சிற்ப சாத்திர விதிக்கமைவானதும், வனப்புமிக்கதும், தரத்தில் முதன்மை வாய்ந்ததுவும், வரலாற்று முக்கி



யத்துவம் வாய்ந்ததுவும் ஆகும். 90.4cm உயரமுடைய நடராசர் சிலை இச்சிவாலயத்தில்தான் கிடைத்தது. இதுவே இலங்கையில் சோழராட்சிக் காலத்தில் கிடைத்த உயரமான படிமம் என்ற சிறப்பையும் பெற்றுள்ளது. இவை தவிர அளவுப் பிரமாணங்களில் வேறுபட்ட நடராசர் சிலைகளும், அம்மையப்பகந்தர் வடிவம், கழுவாய்மூர்த்தி, உமையம்மையார், நாவுக்கரசர், மாணிக்கவாசகர் போன்ற அடியவர்களின் படிமங்களும் கிடைத்துள்ளன.

எனவே இந்த அற்புதத் திருக்கோயிலானது ஈழத்துச் சைவர்கள் ஒவ்வொருவரும் அறிந்து கொள்ள வேண்டிய சிவாலயமாகவும், இரண்டாம் சிவாலயத்தைப் போல வழிபாட்டு உரிமைகள் பெற்று திகழ வேண்டிய சிவாலயமாகவும் அமைய தென்னாடுடைய சிவனைப் போற்றி விண்ணப்பம் புரிவோம்.

திருச்சிற்றம்பலம்

நிழற்படங்கள் - நகுலேஸ்வரன் பிறவீன்




**Siva P.Ketharan**
English Editor – Thennadu
Thennadu Tamil Atheenam (Madam) – Australia
+61 49949 3300, ketharan@thennadu.org



# Consecutive Year for the Ancient Tamils Aries Vernal Equinox 2298 - April New Year

Tamil New Year, also known or "Puththandu"is a vibrant and culturally significant festival celebrated by the Tamil community around the world. Puththandu is celebrated on the first day of the Tamil month of Chiththirai every year which usually coincided with a date in mid April on the Gregorian calendar. This auspicious occasion holds deep historical and cultural significance, embodying the rich heritage, values, and traditions of the Tamil people.

Tamil New Year is a celebration of Tamil culture, traditions, and heritage. It is a time when Tamils worldwide come together to honor their language, arts, cuisine, and customs that have been passed down through generations. Tamil New Year is a time for spiritual reflection and renewal. People use this occasion to cleanse themselves of past mistakes, seek forgiveness, and make resolutions for personal and spiritual growth in the coming year. It is a time to let go of negativity and embrace positivity.

The significance of April 14th or Chiththirai 1st as the Tamil New Year is deeply rooted in the astronomical phenomenon of the sun's movement throughout the year. Contrary to the common notion that the sun always rises due east, its path is more dynamic, showcasing different orientations throughout the year. The concept of the sun rising exactly in the east on April 14th is tied to the equinox, a point in time when the sun crosses the celestial equator, resulting in nearly equal lengths of day and night. This event marks the beginning of the Tamil month of Chiththirai and is known as Chiththirai 1st. Throughout this celestial journey, Tamils have traditionally celebrated these key astronomical evens of equinoxes as significant milestones. These occasions are not only markers of time but also reflections of the interconnectedness between nature, culture, and spirituality.

While there may have been arguments for aligning the Tamil New Year with January 14th (Thai 1st), strong reasons solidify April 14th (Chiththirai 1st) as the more fitting date. Firstly, the April date aligns with the solar cycle and the sun's movement, a foundational aspect of the Tamil calendar. Secondly, it coincides with the spring equinox, symbolizing a natural fresh start. Culturally, April 14th is deeply ingrained in Tamil traditions and rituals, disrupting this connection would weaken the festival's significance.

In conclusion, Tamil New Year, celebrated as Puththandu on April 14th or Chiththirai 1st, stands as a vibrant embodiment of Tamil culture, spirituality, and tradition. The date's alignment with the solar cycle and the equinox underscores its deep-rooted significance in marking new beginnings, growth, and renewal. This auspicious occasion serves as a time for Tamils worldwide to come together, honor their heritage, seek spiritual enlightenment, and embrace positivity for the year ahead. While arguments may arise for alternative dates, the cultural, astronomical, and spiritual importance of April 14th remains steadfast, solidifying its place as the fitting and meaningful day to celebrate Tamil New Year.

சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு - குறள் 18


# Miracles of Saiva Saint Thirugnanasampanthar Swamikal



Siva P.Abiram SG

Thirugnanasampanthar was a Saiva poet/saint, who lived in the seventh century CE. He is one of the most prominent saints amongst the 63 Nayanars. Sampathar's entire collection of hymns about Lord Siva is called "Thirukkadaikappu". These were later collected to form the first three volumes of the Thirumuraikal – one of the principle texts for Saiva Sithantham philosophy.

Once when Sambanthar was staying in a town known as Thirumarugal a lady was crying in the morning, overcome with passion Sambanthar went close to the lady and asked her what had happened.



The lady told him that she was the seventh daughter of Thaman of Vaippoor and her nephew was lying on the ground next to her. Her father had told him he would marry his first daughter to him, but her father broke his promise and married his eldest daughter to a stranger. Her father then gave his other daughters to strangers. As her nephew had been cheated on, she wanted to console him by eloping with him. But he was bitten by a snake next to the Rathnagiriswarar Temple. After telling Sampanthar her story, she prayed sampanthar to save him.

Sampanthar felt very pity for her and prayed to Sivan with a hymn to rescue her from her despair the hymn goes as follows:

சடையா யெனுமால் சரண்நீ யெனுமால்
விடையா யெனுமால்வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள்உண் மெலிவே

sadaiyaa yenumaal sarannee yenumaal
vidaiyaa yenumaalveruvaa vizhumaal
madaiyaar kuvalai malarum marukal
udaiyaay thakumo ivalun melive.

In English this translates to, Sivan of thiru-marugal, where blue lotus blooms along the sluices! This girl faints in fear. Is this befitting you to let this girl suffer such anguish? (Please show your grace on this poor girl).

By the grace of Sivan, the youth was resurrected and rose up from the ground. The lady with her nephew fell at the feet of Sampanthar, who arranged the wedding for the couple

To be continued...

# Tamils' Time Prediction is a Complete Science It is not historical Stories

It is vital for the Tamil race to understand the very essence of Thiruvalluvar's couplets of wisdom. The lives of Tamils are interwoven with nature. Tamil itself is a language of nature. Hence> the Tamils' science would never contradict nature.

செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து
இயற்கை அறிந்து செயல் (குறள். 637)

Seyarkai arinha kadaitthum ulakattu
Iyarkai arinthu seyal (Kural 637)

Meaning: Though you are acquainted with artificiality (unnaturalness), the truest act is to understand the world of naturalness and to follow the natural world in the act.

The stand taken by Thiruvalluvar is that, much though the world has led us to an unnatural and vicarious way of learning, we can still direct our intellect and action towards prioritising the realm of nature. Our approach should always be based on nature because, in any other way, it could never lead to scientific explorations or findings. Nature is free from bias. Nature alone is the manifestation of truth. Hence, evidence should always be based on nature. Such is the deeper meaning of this couplet.

Nakkeerar, the poet of the Sangam Tamil, in his anthology titled TirumurukAtruppadai called the capacity to orientate and align the nature as "**இயவுள்** - iyavul".

"பெரியோர் ஏத்தும் பெரும் பெயர் இயவுள்" - திருமுரு.
"Periyor Etthum Perum Peyar Iyavul" – Tirumurukaatruppadai

The root of the word '**இயவுள்** - Iyavul' is from '**இயவு** - iyavu' which means a core element that has the capability of projecting, orienting or aligning. This Iyavul stands on the basis of truthfulness and is without bias. Hence, the goal of life must always be projected onto the foundation of nature. Any violation of natural law will result in massive destruction or extinction caused by one living thing on another. It can either be language, race, politics or other crucial things that hinder the progress of human life and which eventually end in desolation.

எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு. (குறள். 355)
Epporul Etthanmaitthu Ayinum Apporul
Meipporul Kaanpathu Arivu (Kurai 355)

Meaning: Regardless of the nature of the thing/matter one experiences, wisdom is, when one delves into its true meaning.

The first impediment that has afflicted a few Tamil scholars is their confusion over whether Tamil time prediction is a science or history. Irrefutably, Tamils' time prediction is a complete science and not a history.

TholkAppiyam is not a Tamil grammar text alone but also serves as the grammar of the life science of Tamil. This is the only text that expounded on the psyche ascending field, which creates the macrocosm (complex structure or universe) as Puratthinai and the quantum field that creates the Microcosm (humankind or miniature characteristic of something larger) as Agatthinai. The Puratthinai has been developed by the Tamils into a cosmic thinking culture, while the Agatthinai has been developed into a quantum thinking culture. This is, in fact, an exceptional model of modern science. (Sivakumar, 2023).

The Mayanga Marabu non-delusive legacy values developed by TholkAppiyar are:

மறுவில் செய்தி மூவகைக் காலமும்
நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்
-(தொல்.பொருள். புறத்.74 )

Maruvil Seithi Muvakai Kaalamum
Neriyin Aatriya Arivan Theyamum
(Tol.porul. Puratthinai. 74)

1. The way in which the three divisions (past, present, future) of time are validated as knowledge by the ancient Tamils is beyond the grasp of a few contemporary Tamil scholars. Without a basic understanding, these Tamil scholars have been trying to project history as a replacement for the science of the time. The merit of Tamil panchangam astronomy, the science of the five elements and physics will never pander to the whims and fancies of a group of people who want to replace science with history. A consecutive year created based on a single monarch, individual or sage is artificial. It can never be applied to understand the changes that occur in nature, and it could never be validated information (information certainty). Hence, one should not expect the Tamils to follow the consecutive year as practised by other races, which is mostly based not on astronomical science but historical events.

2. Is there no consecutive year for Tamils? Are there any impediments to creating one? Are our ancient Tamil scholars ignorant of astronomical time? Did they create the Panchangam without knowing about the Tamil consecutive year? Did our ancient Tamil seafarers explore the oceans without knowledge of astronomical science? Did the savants of Tamil literature and mathematics create the great Sangam era culture without possessing astronomical knowledge? How shallow the knowledge of so-called 'Tamil scholars' is and how twisted their projection of Tamil culture is. Until now, there seems to have been no effort made by them to understand the Panchangam astronomical science and its mathematical system> which is why of late they have been distorting the very science of Panchangam and the rationale behind it. The Tamils possessed the ability to measure the **ஊழி** - Oozhi (loosely translated as "eon or epoch" - a long period of time, especially one in which there are new developments and great change in the astronomical nature) and used the **ஊழி** - Oozhi time measurement to create the consecutive year. This was clearly mentioned in the Sangam Tamil literature. However, the Tamil scholars had failed to research and understand **ஊழி** - Oozhi.

ஊழியும் யாண்டு எண்ணி யாத்தன் யாமமும்
நாழிகையானே நடந்தன (நான்மணிக்கடிகை, 71)

Oozhiyum yaandu enni yaaththana; yaamamum
Naazhigaiyane nadanthana
(Naanmanikkadigai, 71)

3. The science of how the Tamils, since ancient times, predict time was elucidated by PerungkundrUr KizhAr of the Sangam era in his Pathitruppattu (pathitruppatu.90:51-54)



Dr.R.Sivakumar
Universiti Sains Malaysia


நின் நாள் திங்கள் அனைய ஆக
திங்கள், யாண்டு ஓரனைய ஆக;
யாண்டே , ஊழி அனைய ஆக: ஊழி.

Nin naal thingal anaiya Aga thingal, yaandu Oranaiya Aga; yaade, Oozhi anaiya Aga: Oozhi

said so Perungkundrur Kizharndrur Kizhar

a) Tamil Months are calculated when the moon joins in (superimposes on) the star.

b) Tamil Years are calculated when the sun joins in (superimposes on) the fiducial goat origin point. When the celestial axis> solar ecliptic axis and the Meridian (at which the fiducial or anchor stellar axis appears) intersect> the 3-dimensional geometrical coordinate system is formed. This is known as the fiducial goat origin point (**பெயராத ஆடு →ஆட்டை → யாண்டு → ஆண்டு** fixed Adu → Attai → yAndu → Andu). Years are calculated when the sun joins (superimposes on) or merges at the fiducial goat origin point.




Fiducial or Anchor Stellar Axis Meridian, Ecliptic Coordinate Axis, Celestial Coordinate Axis is Tamils' Astro Time Mathematical Model.

c) The Tamils saw the Cop-Oozhi as the stability or non-derailment of nature/creation and as nature's/creation's grand manifestation. Oozhi can also be understood as the annihilation of the previous/ existing governing laws and the birth of a new one. Nature's 'infinite- -long duration' time science was known as Oozhi by the Tamils. Example:

நாழிகை ஊழியில் நீண்டு உலாவும் - பெரிய திரு -9: 5:3
Naazhigai Oozhiyil Neendu ulavum - Periya Thiru - 9:5:3

The conjunction of the moon, sun or other planets or the conjunction of stars or stellar and other astronomical elements together functions on a massive order as a time zone, or the orbit emerges as expansive time is called **ஊழி**-Oozhi by the Tamils.

The sun, moon and the larger planets Jupiter, Saturn and the stellar system in its 360-degree orbit are all on a straight line, placed at their origin (NarthOndral or Prabavam) of 0 degrees, at which the sidereal year prediction, solar year prediction, lunar year prediction, Jupiter or

(See Page 15 )

# யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை மங்களநாதர் திருக்கோயிலில் இரண்டாவது பெருஞ்சிவனிரவு வழிபாடுகளும் சிறப்பு நிகழ்வுகளும்



# பெருஞ்சிவனிரவை ஒட்டிக் கோணேச்சரத்தான் நகர்வலம்



நிழற்படங்கள்: திருமலை சண்முகநாயகம் யுதிஷ்ரன் (YS Snaps)














## Tamils' Time Prediction is a Complete Science...

(Continued from page 13)

Jovian year prediction and Saturn year prediction all came together and became one calculation in unison. This phenomenon is what we called "ஊழி - Oozhi."

The fiducial goat origin point of the sidereal year, as predicted by the ancient Tamils in their Panchangam, is the actual ஊழி - Oozhi consecutive year. According to Maclean's manual of Madras Presidency administration (Maclean, 1893), the month of Chittirai in B.C. 274 (மேழ விழுகம்பம் - Aries vernal equinox ) which cut through the Libra and virgo zodiacs was calculated as the first month of the year of the ஊழி - Oozhi time.

ஊழி - Oozhi time can be effectively calculated using the Nirayana (fiducial goat) Sayana (flexible goat) differential equation. The brilliance of the Tamils' panchangam calculation can be verified through the technological science of the Stellarium Astronomy Software, with which the Tamilar



Time Oozhi can be precisely calculated as shown below

The Oozhi time cannot be calculated at the flexible goat origin point of the solar stellar year prediction without knowledge of the Nirayana -fiducial goat origin point. The fiducial goat origin point of the ஊழி - Oozhi time is used as a benchmark in the astronomical calculation, wherein every passing year the 12 hora or zodiac orbit is compared with the Sayana -flexible goat origin point and calibrated. The Tamils have owned this outstanding astronomical technology since ancient times.

For more information on Tamil astrological science> please see Dr. Sivakumar's book "Tamilar Hermeneutic Logical Wisdom of Time, Volume 1: Physical Time" (Sivakumar, 2023).

i. The Birth of Tamilar Chitthirai New Year;

ii. Why the month of Thai is not the Tamil New Year Prediction Mode;

iii. Why The Birth of Tamil New Year Cannot be Changed from Ancient Tamil Chittirai to New Thai Birth Year through Astro Geometrical Mathematics;

iv. Why Tamilar Accepted Fiducial Goat Origin Point as Aerospace Mathematical Science;

v. Tamilar Sexagesimal base - 60 Years Prediction ;

vi. Why Tamil New Year Astronomy was Placed in Chittirai's Fiducial Vernal Goat (~14 April) and not in Panguni's Flexible Vernal Equinox Goat (~21 March)).

The Tamils should shed their confusion and embrace the Tamil New Year according to the panchangam, which has been accepted as a physical time tradition. Such acceptance would avoid the distortion and the very alienation of the Tamil community from its own tradition par excellence. This is needed to defend the Tamil astronomical science.

Thiruvalluvar consecutive year is meant to complement the science of time, to propagate the supremacy of Tamil history and to reinforce the understanding of the self as rooted in the Tamil tradition. Hence, let us all set aside our friction and annex the Thai consecutive year as segment of the year that enriches the ஊழி - Oozhi. Let us remember, time and again, that Tamil's non-delusive legacy time prediction is a holistic natural science and not a personal history.

There are countless ways that one could be prevented from thinking. But the only way to see the truth is to glide along with it, as the truth blossoms and reveals itself.

**'உண்மையொடு ஊ ஊழியசே' சுமேரிய தமிழ் கி.மு 2094 - 2047 சூல்கியின் பாசுரம்**

'Uṇmaiyodu ū ūliyasē (un-mey-da u-ul-li-a se)' Sumerian Tamil B.C 2094 –2047 Sulgi's Hymn B

# தென்னாட்டு நிகழ்வுகள்





ICBT பல்கலைக்கழகத்தில் செந்தமிழ் சாந்தி வேள்வி வழிபாடுகள் (16-03-2024)



மாசித் திங்கள் நிறைமதி வழிபாடும் இதழ் வெளியீடும் (23-02-2024)



தென்னாட்டில் பெருஞ்சிவனிரவு வழிபாடுகள் (08-03-2024)



தென்னாட்டில் நுழைவு தீக்கை (சமய தீக்கை) வழங்கல் (17-03-2024)



தெய்வத்தமிழ் திருமண விழா வழிபாடுகள் (16-03-2024)

தென்னாடு செந்தமிழாகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் நாற்பத்து மூன்றாவது திங்கள் செய்தியிதழ் “தென்னாடு”, சிவத்திரு.சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு நல்லூர் “மதி அச்சகத்தில்” அச்சிடப்பட்டு, மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2297 மீனம் நல்லோரை பங்குனித் திங்கள் 11ம் நாள் நிறைமதி அன்று (24-03-2024 ஞாயிற்றுக்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி, தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம். சைவ மாணவர் சபை பதிவு இலக்கம் – HA/4/JA/343.
தொலைபேசி +94 21 222 9722 | புலனம் +94 (70) 770 1111 | மின்னஞ்சல் thennavan@thennadu.org | fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org